# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்து௵ பங்குனி௴ 9௳ 22—3—1948 ஹிஜ்ரி 1367 ஜமாதிலவ்வல்௴ 10௳ திங்கட்கிழமை. } இதழ் 9.


## இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் முஸ்லிம் லீக் கோட்டையின்மீது 'மௌலானா ஸையத் உஸேன் அஹ்மத் மதனி அவர்கள் பொழிந்த குண்டுமாரி.

இன்று ஹிந்து மஹா சபா பாமர ஹிந்து சகோதரர்களிடையே, காங்கிரஸ் ஹிந்து லீடர்களை முஸ்லிம்களை சார்ந்தவர்கள் என்றும், ஹிந்து மதத்தை காட்டிக்கொடுக்கின்றனர் என்றும் பிரசாரம் செய்கின்றதோ அதைப் போல அன்று முஸ்லிம் லீகர்கள் பாமர முஸ்லிம்களிடையே உண்மை முஸ்லிம் தலைவர்களை ஹிந்துக்கள் என்றும் இஸ்லாமிய மதத்தை காட்டிக் கொடுக்கின்றனர் என்றும் சொல்லி மயக்கி வந்தார்கள். அப்பொழுது ராவல்பிண்டியைச் சேர்ந்த ஒருவர் மௌலானா மதனியை அணுகி, தாங்கள் ஹிந்துக்களுடன் சேர்ந்துவிட்டீரா? முஸ்லிம் லீகிலிருந்து ஏன் விலகியிருக்கிறீர்? காங்கிரஸை ஏன் விரும்புகின்றீர்? முஸ்லிம்கள் காங்கிரஸை விட்டு ஏன் விலகியிருக்கின்றார்கள்? என்று கேட்டதற்கு மௌலானா அவர்கள் செய்த பிரசங்கத்தை நேயர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றோம். உண்மையில் அன்றே லீக் கோட்டை தகர்ந்துவிட்டது. இன்று லக்னோ மகாநாட்டின் சார்பாக மௌலானா அபுல் கலாம் ஆஸாத் அதை அகற்றினார்.

—ஆசிரியர்

### நாங்கள் ஹிந்துக்களுடன் சேர்ந்துவிட்டோம் என்றால் என்ன?

**இந்திய** பூமியில் காலடிவைத்த அன்றிலிருந்து முஸ்லிம்கள் ஹிந்துக்களுடன் சேர்ந்தே வாழ்ந்து வருகின்றனர். நானோ பிறந்த நாளாய் சேர்ந்து இருக்கின்றேன். நான் ஹிந்துஸ்தானத்தில் பிறந்து வளர்ந்தவன். ஒரு ஊரில் அல்லது தேசத்தில் வசிப்பவர்கள் ஒருவரையொருவர் பார்ப்பார்கள்; சந்திப்பார்கள்; தொழில், லேவாதேவி, வியாபாரம், விவசாயம், கல்வி முதலிய எல்லா துறைகளிலும் சேர்ந்தே இருப்பர். ஆகையால் நானும் முஸ்லிம்களும் இந்தியாவில் இருந்துவரும் வரை ஹிந்துக்களுடன் சேர்ந்துதான் இருப்போம். தெருக்கள், பஜார்கள், வீடுகள், ரயில்கள், பஸ்கள், டிராம்கள் ஸ்டீமர்கள், ஸ்டேஷன்கள், கலாசாலைகள், கல்லூரிகள், தபாலாபீஸ்கள், தாணாக்கள், கச்சேரிகள், கௌன்சில்கள், சட்டசபைகள், ஹோட்டல்கள் முதலிய எல்லா இடங்களிலும் சேர்ந்தே இருக்கிறோம். முஸ்லிம்கள் ஹிந்துக்களை எங்கே, எப்பொழுது சந்திக்காமல் இருக்கின்றனர் என்று காட்டமுடியுமா? ஒரு முஸ்லிம், ஜமீன்தார் அல்லது வியாபாரியாக இருந்தால், அவருடைய பண்ணையாட்கள், கிராக்கிகளில் ஹிந்துக்கள் இருப்பதில்லையா? ஒரு முஸ்லிம் வக்கீலின் கட்சிக்காரர்களில், நீதிபதிகளில் ஹிந்துக்கள் இருப்பதில்லையா? அவர்களை சந்திப்பது கிடையாதா? முனிஸிபல் கவுன்ஸில், டிஸ்டிரிக்ட் போர்டு, லோகல் போர்டு, சட்டசபை முதலிய ஸ்தாபனங்களின் முஸ்லிம் மெம்பர்கள் ஹிந்து மெம்பர்களுடனும், தலைவர் காரியதரிசி முதலியவர்களுடன் சந்திப்பதும், பரஸ்பரம் மனிதர்கள் காட்டிக்கொள்ளும் மரியாதை அவர்களுக்கு காட்டுவதும் இல்லையா? இத்தகைய விஷயங்களி

விருந்து எஞ்சியுள்ள ஒரு முஸ்லிம் உண்டா? இல்லை. அப்படியானால் 10 கோடி இந்திய முஸ்லிம்களையும் சிரச்சேத தண்டனைக்கு உரியவர்கள் என முடிவு செய்ய வேண்டுமா? சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போது என்னுடன் ஹிந்து மாணவர்கள் பல வகுப்புகளில் சேர்ந்தே வாசித்தனர். சில வகுப்புகளில் ஹிந்து உபாத்தியாயர்களிடமும் வாசித்தேன். சேர்ந்து இருத்தலுக்கு அதிகாரி ஊழியன் இருவருக்குமிடையே உள்ள சம்மந்தம் என்று வைத்துக் கொண்டாலும் முஸ்லிம்கள், ஆபீஸ்களில் ஹிந்து அதிகாரிக்கு கீழ்ப்படிந்து ஒவ்வொரு நிமிஷமும் நடப்பதில்லையா? முஸ்லிம் அல்லாதவர்களும், உத்தியோகம் வகிக்க வசதியுள்ள எந்த டிபார்ட்மெண்டிலும், ஹிந்துக்கள் அதிகாரிகளாக இருக்கலாம். அவர்களுக்கு கீழ் வேலை செய்பவர்களில் முஸ்லிம்கள் இருப்பார்கள். இதை எவ்விதம் தவிர்க்க முடியும்? (என்னைப் பொருத்தவரை இவ்வித டிபார்ட்மெண்டின் ஊழியன் அல்ல) நீங்கள் சொல்லுவதற்கு யுத்தத்தில் முஸ்லிம்களை தோற்கடிக்க ஹிந்துக்களுடன் சேர்ந்து கொண்டேன் என்பது அர்த்தமாயின் இங்கு எந்த யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. நான் எப்பொழுதிலிருந்து ஹிந்து கட்சியில் சேர்ந்து முஸ்லிம்களை ஹதம் செய்ய யுத்தகளத்தில் இறங்கியுள்ளேன். இது அர்த்தமற்ற வீண் பிதற்றல். கடவுள் நம்மைக் காப்பானாக. இந்தப் பொய்யும் பிறட்டும் நீங்கள் ஏன் காதில் வாங்குகிறீர்கள். இந்தக் கூச்சலுக்கு காங்கிரஸில் நான் மெம்பராய் இருப்பது காரணமாயிருந்தால், மால்டாவிலிருந்து வந்தது முதல், காங்கிரஸில் இருக்கின்றேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு முன் பலாத்கார புரட்சி மனப்பான்மை கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதியாக இருந்தேன். இதற்காக 4 வருஷ மால்ட்டாவாஸ தண்டனை கிடைத்தது. விடுதலையடைந்து திரும்பி வந்தபிறகு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சாத்வீக போராட்டங்களினால் இந்திய சுதந்திரத்தை அடைய வேண்டும் என்ற நோக்கமுள்ளவனாக மாறினேன். காங்கிரஸிலும், ஜமீயதுல் உலமாவிலும், கிலாபத்திலும் 1920-லிருந்து அங்கத்தினனாய் இருந்து வருகின்றேன். கிலாபத் கமிட்டி அழிக்கப்பட்டு போனதால் இப்பொழுது கிலாபத்தில் யாதொரு பங்கும் எடுப்பதில்லை. ஏகாதிபத்தியத்தை பலஹீனப்படுத்தவும், இந்திய பூமியிலிருந்து களைந்தெறியவும் சாத்வீக முறையில் கிளர்ச்சி செய்யும் எந்தக் கட்சியுடனும் ஒத்துழைக்க நான் எப்பொழுதுமே தயார். 25 வருஷங்களாக காங்கிரஸில் சந்தா செலுத்துவதும், கூட்டங்களுக்குப் போவதும், பிரசங்கள் நிகழ்த்துவதும், பதவிகளை ஏற்பதும், சிறை வாசம் அனுபவிப்பதும் உண்டு. ஜமீயதுல் உலமாவிலும் இதே தோரணையில் இருந்து வருகின்றேன். ஆனால் ஹிந்துக்கள், சீக்கியர்கள், கிருஸ்துவர்கள். யூதர்கள் உண்டாக்கும் வகுப்பு வாத ஸ்தாபனங்களுக்கு போவதும் அங்கத்தினனாய்ச் சேருவதும் கூட்டங்களில் கலந்து கொள்ளுவதுமில்லை. இதுதான் என்னுடைய உண்மையான நிலைமை.

## நீங்கள் கேட்கும் முஸ்லிம் லீக் பற்றி விளக்கம்

இந்த சந்தர்ப்பத்தில் கடந்த மஹாயுத்த ஆரம்பத்தில் காலஞ்சென்ற மௌலானா ஷிப்லி (மர்ஹூம்) அவர்களின் சில வாக்கியங்களை ஞாபகமூட்டுவதே போதுமென நினைக்கின்றேன். இப்பெரியார் லீகின் லீடராகவும், ஜீவநாடியாகவும் விளங்கினர். இன்றைய நிகழ்ச்சிகளின் போக்கினின்றும் தனித்து இருந்தவர். அவர் கூறுவதாவது, "நாம் நம்முடைய கால்களைக் கொண்டு நிற்க வேண்டும். நாமே நம் வழியை நிர்ணயிக்க வேண்டும். நம்முடைய தேவைகள் ஹிந்துக்களுடன் சேர்ந்தும், தனித்தும் உள்ளன. ஆகையால் நமக்கு ஒரு தனி அரசியல் மேடை அவசியம் தேவை இத்தேவையின் அவசியத்தை ஒட்டி நம் கண்முன் ஒன்று முளைத்திருக்கிறது. அதுதான் முஸ்லிம் லீக் இது என்ன அதிசயப் பிறவி. அரசியலா இது? கடவுளறிய இல்லை! காங்கிரஸுக்கு எதிர்ப்பா? கிடையாது! லார்டுகள் சபையோ? ஆம்! கிட்டத்தட்ட ஒத்துதான் இருக்கிறது" (ஹயாதே ஷிப்லீ பக்கம் 617)

மௌலானா மேலும் கூறுவதாவது:- "முஸ்லிம் லீகினுடைய அஸ்திவாரத்தின் முதலாவது கல் 'சிம்லா தூது' வருங்காலத்தில் லீகினுடைய வேலை திட்டத்தின் சகல அம்சங்களிலும் இத்தூதின் ஆத்மா வியாபித்திருக்கும். முப்பது வருஷ போராட்டங்களுக்கு பிறகு ஹிந்துக்கள் பெற்ற சில உரிமைகளில் முஸ்லிம்களின் பங்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் சிம்லாதூது கோஷ்டியின் லட்சியமாய் இருந்தது வெளியிடப்பட்டதும் இதுதான்" (ஹயாதேஷிப்லீ, பக்கம் 618.) வேறு ஒரு இடத்தில் மௌலானா கூறுவதாவது, முடிவாக லீகின் வேலைதிட்டத்தை பற்றிய பிரச்னை. இத்திட்டம் உலகம் அழியும் வரையில் திருந்துமா? லீக் பட்டம் பதவிகள் ஆசையை விடுமா என்பது முதலாவது கேள்வி. பசும்பொன்னெழுத்துக்கள் மின்னும் பட்டாக்களை அணிந்தவர்கள், தலைவர், உபதலைவர், காரியதரிசி, அங்கத்தினர்கள் முதலிய பதவிகளுக்கு அவசியம் என்பதை லீக் விட்டுவிடுமா? அரசியலில் இந்த பட்டங்களுக்கு என்ன மதிப்பு

இருக்கிறது. அதிகாரிகளின் ஆதரவில் போலிக் கௌரவம் சம்பாதிக்கும் முதலாளிகளும், நவாபுகளும், ஜமீன்தார்களும் தங்கள் கௌரவத்திற்கு குறைவுதேடிக் கொள்ள சம்மதிப்பாரா? ஜமீன்தார்களுக்கும் பட்டம் பதவி வகித்த முதலாளிகளுக்கும் ஹிந்துக்களில் குறைவில்லை. ஆயினும் கடந்த முப்பது வருஷங்களில் ஒரு ஜமீன்தாரையோ அல்லது தாலுக்காதாரையோ தலைவர் பீடத்தில் அமர்த்தினரா? அவர்களுடைய சிரங்கள் பட்டங்களால் அலங்கரிக்கப்பட்டனவா? (ஹயாதேஷிப்லி, பக்கம் 619.) பின்னும் மௌலானா கூறுவதாவது:- "இத்துறையில் அரசியல் வாதத்தில் முக்கியமாக விளக்க வேண்டியது முஸ்லிம் லீக். அது இன்றையிலிருந்து ஆயிரம் வருஷங்களுக்கு பிறகும் அரசியல் கட்சியாக முடியாது என்பதேயாகும். லீக் எதற்காக, எப்படி, யாரால், எப்பொழுது ஸ்தாபிக்கப் பட்டது? எல்லாவற்றையும் விட (ஸர் ஸையத் மர்ஹூம் சொல்லியபடி) இந்த அசரீரி மனதிலிருந்து உண்டானதா? அல்லது ஏதாவது ஒரு தேவனால் மேலிருந்து கூறப்பட்டதா? (ஹயாதேஷிப்லீ, பக்கம் 618) 1910-ல் மௌலானா ஷிப்லி அவர்கள் முஸ்லிம்கெஜட்டில் வெளியிட்டதும் அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் காணப்படும் மேற்கூறியுள்ள அவருடைய வாசகங்களால் லீகின் உண்மையான நிலைமையை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இன்னும் தெளிவான விளக்கம் தேவையாக இருப்பின் (Bright Future) 314-பக்கத்திலிருந்து படித்துப்பாருங்கள். மார்ச் 1907-ல் முஸ்லிம் லீகினுடைய முதலாவது காரியதரிசி நவாப் விகாருல் முல்க் செய்த பிரசங்கத்தை கவனியுங்கள். நவாப் சாஹிப் சொல்வதாவது, "ஏதாவது ஒரு காலத்தில் ஆங்கிலேயர்களுடைய ஆட்சி இந்தியாவில் இல்லாமல் போய்விடும் பக்ஷத்தில் (கடவுள் அப்படிச் செய்யக்கூடாது) நாம் ஹிந்துக்களுக்கு அடிமைகளாக இருக்க நேரிடும். நம்முடைய உயிர், பொருள், கவுரவம், கலாசாரம் முதலிய யாவும் அபாயத்திற்குள்ளாகும். இந்த ஆபத்திலிருந்து முஸ்லிம்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள ஒரே ஒரு உபாயம்தான் இருக்கின்றது. அது ஆங்கில ஆட்சியை இந்திய பூமியில் நிலைபெறச் செய்வதே நாம் கவர்மெண்டாரை பாதுகாக்க வரிந்துகட்டி நின்றால் நம்முடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். நாமும் கவர்மெண்டும் ஒன்று. கவர்மெண்டு இல்லையேல் நாமும் இல்லை. ஆங்கிலேயர்கள் இல்லாமல் கௌரவமாகவும் சுகமாகவும் நாம் வாழமுடியாது. முஸ்லிம்கள் மனப்பூர்வமாய் ஆங்கிலேயர்களோடு ஒத்துழைத்தால் அவர்களையாரும் இந்தியாவிலிருந்து வெளியேற்ற முடியாது. தங்களை ஆங்கிலேயர்களுடைய சேனையாக நினைத்துக் கொள்ள வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்தை முஸ்லிம்களுக்கு போதிக்க வேண்டியது அவசியம். பிரிட்டிஷ் முடியாட்சிக்காக தங்களுடைய உயிர்களை பலியிடவும் ரத்தத்தை சிந்துவதற்கும் முஸ்லிம்கள் தயாராக இருக்க வேண்டும். கவர்மெண்டாரிடம் தங்களுடைய உரிமைகளை மரியாதையுடனும் பயபக்தியுடனும் கேட்கவேண்டும். நம்தேச இதர சகோதரர்கள் அனுஷ்டிக்கும் முறைகளை நாம் பின்பற்றக்கூடாது. அரசாங்கத்திற்கு உதவுவது உங்களுடைய சமூகக்கடமை என்றஎண்ணம் உங்களுடைய மனதில் அலைவீசிக்கொண்டிருக்கவேண்டும். நாம் ஆங்கில சேனையின் சோல்ஜர்கள். நம் தலைகளின்மேல் பிரிட்டிஷ் கொடி பறந்துகொண்டிருக்கிறது, என்று நீங்கள் எண்ணியிருக்கவேண்டும். தேவையானால் பிரிட்டிஷாருக்காக உயிர்களை பலியிட ஓடியாடி உயிர் வாழ்கின்றோம், என்று நீங்கள் நிச்சயமாய் நம்பவேண்டும். ஆங்கில சிப்பாய்களுடன் சேர்ந்து இந்த ஆட்சியின் விரோதிகளுடனும் எதிரிகளுடனும் யுத்தம் செய்யவேண்டும். இந்த எண்ணம் உங்களுக்குள் குடிகொண்டால் உங்களுடைய சமூகம் உங்களைக்குறித்து பெருமைகொள்ளும் என்று நம்புகிறேன். வரும் சந்ததிகள் உங்களுக்கு கடமைப் பட்டிருக்கும். இந்தியாவில் இங்கிலீஷ் ஆட்சியின் சரித்திரத்தில் உங்களுடைய பெயர்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். (Bright Future பக்கம் 33, அலிகார் மாணவர்கள் முன்னிலையில் நவாப் விகாருல் முல்க் 1907, மார்ச் 23-ல் முஸ்லிம்களின் அரசியலைக் குறித்து நிகழ்த்திய பிரசங்கம்.)

மேற்கூறிய சரித்திர பூர்வமான வாசகங்களிலிருந்து முஸ்லிம் லீக் என்பது என்ன என்று நீங்கள் உணர்ந்திருக்கவேண்டும். மவுலானா ஷிப்லி மர்ஹூம் அவர்கள் அன்று சொன்ன அதே ஜீவன் இன்றைக்கும் லீகின் செய்கைகளில் காணப்படுகிறது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு உதவுவது தங்களுடைய வாழ்விற்கு. ஆங்கிலேயர்களை ஆதாரமாக நினைப்பது, உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் ஆங்கில ஆட்சிக்கு தத்தம் செய்வது, இந்த தியாக உணர்ச்சியை முஸ்லிம்களுக்கு ஊட்டுவது, ஹிந்துக்களை, விரோதிகளென்றும் அவர்களுடைய அதிகாரத்தை எல்லையற்ற தீங்கு என முஸ்லிம்களிடையே பிரசாரம் செய்வது, ஹிந்துக்களைக்காட்டி முஸ்லிம்களை பயமுறுத்துவது, தேசிய அரசியல் ஸ்தாபனமாகிய காங்கிரஸிலிருந்து அவர்களை விலக்கிவைக்க முயற்சிப்பது முதலியன காயிதே ஆஜம் அவர்களின் தலைமை உரைகள், லீக் காரியக்கமிட்டி மெம்பர்களின் பிரசங்கங்கள், லீக் பிரஸ்ஸின் வெளியீடுகள், டான், மன்ஷூர் இவைகளின் தினசரி கட்டுரைகளைப் பாருங்கள். அதே ஜீவன் அவைகளில் த்வனிக்கும் உண்மையைக் காண்பீர்கள்.

(தொடரும்)

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 22—3—'48 திங்கட்கிழமை { இதழ் 9

# சுதந்திர இந்திய பட்ஜெட்.

**ஏப்ரல்** முதல் தேதியுடன் ஆரம்பமாகும் புது வருஷ சுதந்திர இந்திய பட்ஜெட் பிப்ரவரி 28-ந்தேதி மாலை 5-மணிக்கு இந்திய பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப் பட்டது. அவசியமான மாறுதல்களுக்காக ஸெலக்ட் கமிட்டி முன் சமர்ப்பிப்பதாக கனம் நிதி மந்திரி அறிவித்தார். ஆகவே பொதுஜனப் பிரதிநிதிகளான அங்கத்தினர்கள் பொதுஜன நலன்களைக் கருதி பட்ஜெட்டின் சில அம்சங்களில் அபிப்பிராய பேதம் கொண்டால் நிதி மந்திரி அதை ஏற்பாரென்று நம்ப இடமிருக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் முதலில் குறிப்பிட்ட ஒரு விஷயம் மக்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம். ஆகஸ்ட் 15-க்கு முன் அடிமைகளாக இருந்த நாம் பட்ஜெட்டின் முக்கியத்துவத்தை உணரவோ, அரசாங்க, முதலாளித்துவ இரட்டைச் சுமையின் கீழ் அகப்பட்டு நசுக்கப்படும் நாட்டின் பெரும்பான்மை ஏழை மக்களைக் குறித்து கவலைப் படவோ இல்லை. அது சாத்தியமில்லாமல் இருந்ததும் வாஸ்தவமே. அதனால் முதலாளிகள் கொழுத்தும் ஏழை மக்கள் நசித்தும் வந்தனர். இன்றைக்கும் நாம் அலட்சியமாகவே இருந்து வருகிறோம். பட்ஜெட் கீழ்தர, நடுத்தர மக்கள், விவசாயிகள், தொழிலாளர்களின் விதியை நிர்ணயிக்கின்றது என்பதை பொது மக்கள் உணர வேண்டும். ஒன்றுக்கு எட்டாக உயர்ந்திருக்கும் அகவிலை ஏற்றத்தால் குறைந்த வருமானமுள்ள மக்கள் வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளையும் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர். ரூபாயின் மதிப்பு இரண்டணாதான். இந்நிலையில் 32 ரூபாய் வருமானமுள்ள ஒருவன் மாதம் 4 ரூபாயில் வாழ்க்கை நடத்துகிறான் என்றே சொல்லவேண்டும். பொருளாதார பாஷையில் இதற்குச் 'செலாவணிப் பெருக்கம்' என்று பெயர். உற்பத்திக் குறைவும் செலாவணிப் பெருக்கமுமே அகவிலை ஏற்றத்திற்குக் காரணம். செலாவணிப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி உற்பத்தியை பெருக்குவது சர்க்காரின் கடமை. இத் துறையில் ஒரு சர்க்கார் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை அதன் பட்ஜெட்டைக் கொண்டுதான் அளவிட முடியும். சரியான பட்ஜெட்டால் நாடு செழிக்கும். இல்லையேல் ஏழை பொதுமக்கள் பல துன்பங்களை சகிக்க வேண்டியிருக்கும். ஆகையால் பட்ஜெட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் அலசிப் பார்க்க வேண்டியது சுதந்திர நாட்டு மக்களின் கடமையுமாகும். பொது மக்கள் வரவேற்காத பட்ஜெட்டை அவர்கள் மீது சுமத்த முடியாது. ஆனால் இந்தியாவின் நிலைமையே அலாதி. பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது. ஆயினும் எப்பொழுது, யாரால் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேறியது? அதன் சாதக பாதகங்கள் என்ன? என்பதைக்குறித்து நமக்கு கவலையிருக்கவில்லை. அடிமை இந்தியாவில் அலட்சியமாய் இருந்ததைப் போலவே இருக்காமல் சுதந்திர இந்தியாவில் பட்ஜெட் ஒவ்வொரு அம்சத்தையும் ஒவ்வொரு வாக்கியத்தையும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய கடமையை பொது மக்களுக்கு உணர்த்துவதே நம் நோக்கம். கனம் ஷண்முகம் செட்டியாரின் பட்ஜெட்டைக் குறித்து அபிப்பிராயம் கூறுவதற்குமுன் மூன்று விஷயங்களை ஞாபகத்தில் வைக்க வேண்டியது அவசியம். நம் வாழ்க்கை பொருளாதாரத்தை எதிர்பார்த்திருக்கின்றது. பொருளாதாரமும் உற்பத்தியும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. உலகம் என்பது உற்பத்தியின் மாறு பெயரே. மனிதனை கடவுள் சிருஷ்டித்தார். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் பண்டங்களை உற்பத்தி செய்கின்றான். எனவே மனிதன் கடவுளுக்கும் உலகத்திலுள்ள எல்லாம் மனிதனுக்கும் சொந்தம். உற்பத்திக்கு மூன்று விஷயங்கள் அவசியம். (1) பூமி, (2) உழைப்பு, (3) மூலதனம். பூமி, உழைப்பு இவ்விரண்டின் சேர்க்கையால் மூலதனக் குழந்தை பிறக்கின்றது. உலகமே அக் குழந்தையின் தயவை நாடியிருக்கின்றது பூமியின் உற்பத்தியைப் பெருக்க உழைக்கும் விவசாயிகள், தொழிலாளர்களை உற்சாகப் படுத்தவும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் கனம் நிதி மந்திரியின் பட்ஜெட் எங்ஙெந்த வகையில் உதவமுடியுமென்று அலசிப் பார்க்கவேண்டியதவசியம் நிற்க மூலதனம். அது மூன்றும்பட்ச விஷயமேயாகும். ஆசியாவில் பூமியும், உழைப்பும் உண்டு. மூலதனமில்லை. ஐரோப்பாவில் பூமியும், உழைப்பும் குறைவு, ஆனால் மூலதனம் இருந்தது. யுத்தத்திற்குப் பிறகு மூலதன பலம் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு மாறிவிட்டது. மூலதன பலத்தால் உழைப்பை உற்சாகப்படுத்தி உழைப்பின் உதவியைக்கொண்டு பூமியின்

உற்பத்தியை பெருக்கி அமெரிக்கா இன்று உலகத்தின் எஜமானனுக விளங்குகின்றது. கனம் ஷண்முகம் செட்டியாரின் பட்ஜெட் பூமி, உழைப்பு, மூலதனம் ஆகிய பொருளாதாரத்தின் மூன்று அம்சங்களிலும் சுதந்திர இந்தியாவின் பட்ஜெட்டாக இல்லை என்பதை வருத்தத்துடன் வெளியிடாமல் இருப்பதற்கில்லை.

## பட்ஜெட்.

| | | |
|---|---|---|
| வருமானம் | ரூ. | 2,30,52,00,000 |
| சிலவு | ரூ. | 2,57,37,00,000 |
| பற்ருக்குறை | ரூ. | 26,85,00,000 |
| ராணுவச்சிலவு | ரூ. | 1,21,81,00,000 |

ராணுவச் சிலவைத் தவிர இதர இனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகைகள் மிகவும் குறைந்தவை என்பது வெளிப்படை. அபிவிருத்தி திட்டங்களுக்காக 26½-கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது சகல விதத்திலும் குறைவேயாகும். மாகாணங்களுக்கு 30-கோடி ரூபாய் மான்யங்களாகவும், 34 கோடிரூபாய் கடனுகவும் கொடுக்கப்படுகின்றது. முதலில் சோஷியலிஸ அடிப்படையில் 5 அல்லது 10-வருஷ திட்டம் ஒன்றை தயாரித்திருக்கவேண்டும். ஒதுக்கப்படும் தொகைகள் அந்தத் திட்டத்தை அனுசரித்து செலவிடப்படவேண்டும். ஒருவித திட்டமும் இன்றி செலவிடப்படுவதால் எவ்வித பிரயோஜனமும் ஏற்பட முடியாது. நாணயப் பெருக்கத்தை கட்டுப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்றும் அதற்காக வரிவிதிப்பு அவசியமென்றும் கனம் மந்திரி அபிப்பிராயப்பட்டார். அந்த வாதத்தை சரி என்று வைத்துக்கொண்டாலும், பட்ஜெட்டை ஆட்சேபிக்காமலிருப்பதற்கில்லை. இன்று விதிக்கப்பட்டிருக்கும் வரிகள் ஏழைகளுக்கு பாதகமாகவும் பணக்காரர்களுக்கு சாதகமாகவும் இருக்கின்றன. பொதுவாக இந்த பட்ஜெட் சோஷியலிஸ அடிப்படையில் இல்லை. பெரிய முதலாளிகளுக்கே பெருமளவு சாதகமாக இருக்கின்றது. இரண்டாந்தர தொழிற்சாலை முதலாளிகள் பொதுமக்களின் சுமையைக் குறைக்க எவ்வித சலுகையும் காட்டப்படவில்லை. வனஸ்பதி, நெய். எண்ணெகள், தேயிலை, தீப்பெட்டி, புகையிலை மீது விதிக்கப்பட்டிருக்கும் வரியால் ஏழைகளே பாதிக்கப்படுவர். நியாயமாக இந்த வரி பணக்காரர்களின் ஆடம்பர பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருக்கவேண்டும். ரிஜிஸ்டிரேஷன் கட்டண உயர்வும் அதிகமாக ஏழைமக்களையேபாதிக்கும். விவசாயிகள், தொழிலாளர்கள், ஹரிஜனங்களுக்காக பட்ஜெட்டில் ஒன்றும் காணப்படவில்லை. தேசத்தின் மூலதனத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் பெரும் முதலாளிகளுக்கு கனம் செட்டியார் சலுகை காட்டியிருக்கின்ருர். இன்று தொழிலாளர்களின் கோரிக்கைகளை முதலாளிகள் எதிர்க்கின்றனர். ஏழைத் தொழிலாளர்களின் வயிற்றில் அடித்துக் கொடுக்கப்படும் ரூபாயை முதலாளிகள் தங்கள் பாரம்பர்ய டாம்பீகத்தில் செலவிடாமல் தொழிலில் ஈடுபடுத்தி உற்பத்தியை பெருக்குவர் என்பது என்ன நிச்சயம்! தொழில் தேசிய மயமாக்குவதற்கு இவ் விதப் போக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும். தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்குமிடையே இருந்துவரும் பிளவை விசாலமாக்கி அதனுல் உண்மை லட்சியம் மறைந்துபோவதும் சாத்தியமே. இந்த பட்ஜெட் அடிமை இந்தியாவின் பட்ஜெட்டுகளை ஞாபகமூட்டுவதாய் இருக்கின்றது. சுதந்திர இந்தியாவின் நிர்மாண முன்னேற்ற விஷயங்களுக்கு இந்த பட்ஜெட் எவ்விதத்திலும் உதவவில்லை. பட்ஜெட்டை குறித்து நிலவும் பொதுஜன அபிப்பிராயத்தை ஒளிவு மறைவின்றி நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். பொதுஜன அன்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான பண்டித ஜவஹர்லால்நேரு தலைமையின்கீழ் நிதி மந்திரியாக இருக்கும் கனம் R. K. ஷண்முகம் செட்டியார் பொதுஜன நன்மைக்கு முக்கியத்வம் கொடுத்து நடந்துக்கொள்வார் என்று நம்புவோமாக.

---

## காரைக்குடி P. N. ரெத்தினசபாபதி எழுதுகிருர்.

**எல்லைப்புற காந்தி அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருக்கிருரா? அல்லது பிரிந்து விட்டாரா? காந்தி மகான் இறந்தபோது எவ்விடம் இருந்தார்? உலகம் துக்கத்தில் ஆழ்ந்து இருந்தபோது அவர் எங்கு இருந்தார்?**

சமீபத்தில் எல்லைப்புற காந்தி பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் விளக்கிய உண்மைகளை ஆஸாதின் இந்த இதழில் மற்றெரு பக்கத்தில் பார்க்கலாம். அடுத்த இதழ்களில் அவருடைய இயக்கத்தின் நிலைமையைப் பற்றி தெளிவு படுத்தப்படும்.

# பண்டைய இந்தியாவும், கப்பல் தயாரிப்பும்.

இம்மாதம் 14-ந்தேதி பண்டித ஜவாஹிர்லால் நேரு விசாகையில் ஸிந்தியா கம்பெனியார் தயாரித்த முதல் கப்பலான 'ஜல உஷா'வை மிதக்கவிட்டார். 415 அடி நீளம், 52 அடி அகலம், 8000 டன் எடையுள்ள 'ஜல உஷா' 2,600 குதிரை வேகத்தில் வேலை செய்யக்கூடிய இஞ்சினைக்கொண்டுள்ளது.

கப்பல் கட்டுவதிலும், ஓட்டுவதிலும் இன்று ஐரோப்பிய ஜாதியினர் திறமைசாலிகளாகக் கருதப்படுகின்றனர். நீண்ட நாட்களாகவே அத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றமே இந்தியாவில் வர்த்தகம் நடத்தவும் நாளாவட்டத்தில் இந்தியாவை அவர்கள் ஆக்ரமித்துக்கொள்ளவும் காரணம் என்று சொல்லப்படுகிறது.

ஆயினும் பழைய இந்தியாவை அலசிப்பார்க்கும் பொழுது ஒரு காலத்தில் கப்பல் கட்டுவதிலும், ஓட்டுவதிலும் இந்தியர்கள் முன்னணியில் பிரகாசித்தனர் என்பது விளங்கும்.

பார்லிமெண்ட் மெம்பரான ஸர் வில்லியம் டிக்பி 'ப்ராஸ்பரஸ் பிரிட்டிஷ் இந்தியாவில்' கீழ்வருமாறு எழுதியுள்ளார். "இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில் உன்னத நிலையில் இருந்தது. தேம்ஸ் நதியில் இங்கிலாந்து கப்பல்களுடன் இந்தியக்கப்பல்களும் சமமாக ஓடிக்கொண்டிருந்தன. இந்திய கவர்னர்-ஜெனரல் லண்டனிலுள்ள மேலதிகாரிகளுக்கு 1800-ல் அனுப்பிய ரிபோர்டில் கல்கத்தாவில் தயாரிக்கப்பட்ட 10,000 கப்பல்கள் கல்கத்தா துறைமுகத்தில் மட்டும் இருக்கின்றன என்றும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு சாமான்கள் ஏற்றிச் செல்ல அவை உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். பம்பாயில் தயாரிக்கப்படும் தேக்கு கப்பல்கள் இங்கிலாந்து கப்பல்களைவிட எவ்வளவோ உயர்ந்தவை"

மேலும் சர் வில்லியம் டிக்பி சுட்டிக்காட்டியிருக்கும் மிஸ்டர் டபில்யூ செல்லன் வெளியிட்ட கீழ்வரும் அபிப்பிராயம் இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில் இருந்துவந்த உன்னத நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது. "பம்பாயில் மட்டும் இரண்டு வர்த்தகக் கப்பல்கள் அல்லது ஒரு வர்த்தகக் கப்பலும், இரண்டு யுத்தக் கப்பல்களும் 18 மாதங்களுக்குள் கட்டமுடியும். பம்பாய் கப்பல் கட்டும் தளத்தில் மிகப் பெரிய கப்பல்கள் கட்டலாம். கப்பல் கட்டுவதில் வங்காளமடைந்துள்ள முன்னேற்றம், அங்கு கிடைக்கும் ஏராளமான மரவசதியால், குறுகிய காலத்தில் இன்னும் முன்னேற்றமடையுமென நம்பலாம். எனவே ஆங்கிலேயர்களுக்குத் தேவையான கப்பல்கள் அனைத்தும் அந்த துறைமுகத்திலேயே தயாரிக்கப்படுவது சாத்தியமே."

கப்பல் கட்டுவதில் நிபுணர்கள் என்று கருதப்படும் வெள்ளையர்களும் தங்களுக்குத் தேவையான கப்பல்களை இந்தியாவிலேயே தயாரித்து வந்தனர். ஆங்கில பிரமுகர் ஒருவர் 16—12—1670-ல் பாலசூரிலிருந்து கிழக்கு இந்திய கம்பெனி டைரெக்டர்களுக்கு எழுதிய கீழ்வரும் கடிதம் அதை ஊர்ஜிதம் செய்கிறது. 'ஆங்கிலேய வர்த்தகர்களின் அநேக கப்பல்கள் பிரதி வருஷமும் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. முற்றிய, உறுதியான தேக்கு இங்கு ஏராளமாய் கிடைக்கின்றது. உறுதியான கப்பல்கள் கட்டுவதிலும் சாதூரிகமாய் மிதக்கவிடுவதிலும் இந்தியக் கப்பல் கட்டும் தொழிலாளர்கள் தேர்ச்சி பெற்ற எந்தத்தொழிலாளர்களுடனும் போட்டியிடமுடியும்."

1802-க்குப் பிறகும் வர்த்தக, யுத்தக் கப்பல்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு வந்தன. கைதேர்ந்த இந்திய தொழிலாளர்களைக்கொண்டு ஆங்கிலேயர்கள் கப்பல்களின் 'பிளான்'களைத் தயாரித்துக்கொண்டு போவதும் உண்டு.

மிஸ்டர் டபிள்யூ செல்லன் இந்தியக்கப்பல்களை கீழ்வரும் விதத்தில் புகழ்ந்து எழுதியுள்ளார். "மேஜர் கோப்ரா இஞ்ஜினியர் மேற்பார்வையில் பம்பாயில் கட்டப்பட்டிருக்கும் கப்பல் கட்டும் தளங்கள் (அதில் இந்தியத் தொழிலாளிகளே வேலை செய்கின்றனர்.) முதல்தர வேலைப்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன. அவைகளைப் பார்த்து ஆச்சரியப்படாமல் இருப்பதற்கில்லை. அங்கு மிகப்பெரிய கப்பல்கள் கிறுத்தமுடியும்; வங்காளத்தில் உள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவிலும் இதர கடற்படை தளங்களிலும் முதல்தரமான கப்பல்கள் கட்டமுடியும்."

இந்தியாவில் கிடைக்கும் உயர்தர தேக்கைக் கொண்டு முதல்தர தொழிலாளிகளால் இந்தியக் கப்பல் கட்டும் தொழில் மிக உன்னத நிலைமை அடைந்திருந்தது. மேல்நாட்டு வர்த்தகர்கள் வியாபாரக்

கம்பெனிகள் வர்த்தக, யுத்தக் கப்பல்களை இந்தியாவி லேயே தயாரித்து வந்தனர். இந்தியக் கப்பல்கள் ஐரோப்பிய கப்பல்களைக்காட்டிலும் மலிவாகவும், உறுதியுள்ளவைகளாகவும் இருந்தன.

'பிராஸ்பரஸ் இந்தியா'வில் சர்வில்லியம் டிக்பி எழுதியிருப்பதாவது. "தேக்கினல் தயாரிக்கப்பட்ட கப்பல் 50-வருஷங்களுக்கு மேல் வேலை செய்ய முடியும். பம்பாயில் தயாரிக்கப்பட்ட கப்பல்கள் 15-வருஷங்கள் வேலை செய்த பிறகு கடற்படைக்காக வாங்கப்பட்டபோது மிகவும் உறுதியுள்ளவையாகவே இருந்தன.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'ஸர் எட்வர்டு' என்னும் கப்பல் 8-தடவை சாமான்களை ஏற்றிக் கொண்டு போய் வந்தபிறகும் கடற்படைக்காக வாங்கப்பட்டது. ஆங்கிலக் கப்பல் 6-தடவைக்குமேல் போய் வருவதில்லை என்பது வெளிப்படை பம்பாயில் தயாரிக்கப்படும் கப்பல்களின் சிலவு இங்கிலாந்தில் தயாரிக்கப்படும் கப்பல்களின் சிலவைவிட 25-சத விகிதம் குறைவு

இந்த அடிப்படையில் ஒவ்வொரு 12-வருஷங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும் ஆங்கில கப்பல்களுக்கு நான்குமடங்கு சிலவு ஆகும். உதாரணமாக 100-சவரன் சிலவில் இங்கிலாந்தில் கட்டப்படும் கப்பல் 50-வருஷங்களில் மூன்று முறை புதுப்பிக்கப்பட்டாலும் அதன் மொத்தச்சிலவு 400சவரனுக்கு எட்டிவிடும். ஆனல் பம்பாயில் 75-சவரன் செலவில் தயாரிக்கப்படும் கப்பல்கள் புதுபிக்கவேண்டிய அவசியமில்லாமல் 50-வருஷங்கள் உழைக்கும். இவ்விதம் நமக்கு 325-சவரன் மிஞ்ச முடியும். இங்கிலாந்தில் ஒரு கப்பலின்விலை லக்ஷம் சவரனுகின்றது. 50 வருஷங்களில் அது மூன்றுமுறை புதுப்பிக்கப்படும் சிலவு உள்பட 4-லக்ஷம் சவரன் ஆகின்றது. ஆனல் 75,000 சவரன் செலவில் பம்பாயில் கட்டப்படும் கப்பல் 50-வருஷம் வரை புதுப்பிக்க வேண்டிய அவசியமில்லாமல் வேலைசெய்கின்றது எனவே ஒவ்வொரு இந்தியக் கப்பலிலும் 3,25,000-சவரன் நமக்கு மிஞ்சுகின்றது"

இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில் இருந்து வந்த உன்னத நிலை மேற்கண்ட விளக்கத்தினல் ஓரளவு தெரிகின்றது. வெள்ளையர்களும் இந்தியாவில் தயாரிக்கப்படும் கப்பல்களையே பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். இந்தியத்தொழிலை சிதைக்கும் வெள்ளையர்களின் கொள்கை மட்டும் வெற்றிபெருமல் இருந்திருந்தால் கப்பல்கட்டும் தொழிலில் இந்தியா தன்னுடைய இதர வசதிகளால் இதர நாடுகளைக் காட்டிலும் பின்னடைந்திருக்காது என்பதுதிண்ணம்

'பிராஸ்பரஸ் இந்தியா'வில் ஸர் வில்லியம் டிக்பி வெளியிட்டிருக்கும் 19-வது நூற்றுண்டில் இந்தியாவுக்கு வந்துசென்ற இந்தியக் கப்பல்களின் புள்ளி விவரம்:—

| வருஷம் | இந்தியாவுக்கு வந்துசென்ற இந்தியக் கப்பல்கள் | அவைகளின் நிறை (டன்) |
|---|---|---|
| 1857 | 34,286 | 12,19,958 |
| 1898-1899 | 2,302 | 1, 3,033 |
| 1899-1900 | 1,676 | 1,09,813 |

இதிலிருந்து இந்தியக் கப்பல் தொழிலை வெள்ளையர்கள் எவ்வளவு சீக்கிரமாக பாழாக்கினர் என்பது தெளிவாக விளங்குகின்றது.

வருங்காலத்தில் இந்தியா தன்னுடைய பழைய ஸ்தானத்தை அடைந்து உலக நாடுகள் கப்பல்களைப் பெறுவதில் இந்தியாவின் தயவை நாடி நிற்கும் நாள் வெகு தூலவிலில்லை. இந்தியப் பிரதமர் பண்டித ஜவாஹிர்லால் நேரு விசாகையில் 'ஜல உஷா'வை மிதக்கவிட்ட நன்னுளைக்கொண்டு, இந்தியர்களாகிய நாம் அவ்வாறு நம்புவோமாக!

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

"பாகிஸ்தான் ஆட்சியை குறைகூறுவதுமட்டும் என் நோக்கமல்ல. என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் குறித்து கூறப்படும் குறைகளைப் போக்கவே நான் விரும்புகிறேன்.

நாம் பிரிவினையை எதிர்த்தோம். ஆனல் இன்று பிரிவினை நடந்தேறிவிட்டது. நான் ஒரு காரியவாதி. குதாயீ கித்மத்கார் சமாஜ நடவடிக்கைகளை அரசியல் போராட்டமாக மாற்றியவர்கள் பிரிட்டிஷ்காரர்களே. ஜாதீய, வர்க்க பாகுபாட்டை நாம் எதிர்ப்போம் தேசிய நலன்களில் என்னைச் சேர்ந்தவர்கள் உங்களுடன் ஒத்துழைக்கத் தயார்."

"பாகிஸ்தான் நலன் சம்பந்தப்பட்டவரை நண்பர்கள் என்ற முறையில் நீங்களும் குறைகளை எடுத்துக் காட்டலாம்." என்று சர்க்கார் ஆசனங்கள் பக்கம் திரும்பி பாதுஷாகான் கூறினர்.

# முஸ்லிம் சமூகமே எங்கு செல்லுகின்றனை ?

—:O:—

ஒரு சமூகம் தங்களுடைய நிலைமையைத் தாங்களே மாற்றிக் கொண்டாலன்றி
ஆண்டவன் ஒருபோதும் மாற்றுவதில்லை. —(குர் ஆன்)

**முஸ்லிம் சகோதரர்களே !**

முஸ்லிம் லீக் தலைவர்கள் காட்டிய வழியை கண்மூடித்தனமாய், ஒரு அணுவும் பிசகாமல், பின்பற்றி உடல், பொருள், **ஆவி** இம்மூன்றையும் **தத்தம்** செய்தீர்களே! அதன் பலனை சற்று சிந்தித்துப் பார்த்தீர்களா? இந்தியாவில் பத்து கோடி முஸ்லிம்களும் சுகமாய் வாழ வேண்டுமானல் அவர்களின் மதம், கலை, நாகரீகம் முதலியவைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானல், பாகிஸ்தான் ஒரே வழி என்றும் எடுத்ததற்கெல்லாம் இஸ்லாத்தின் பெயரைச்சொல்லி உங்களை ஏமாற்றி பாகிஸ்தான் பெற்ருர்களே ! இன்று பத்து கோடி முஸ்லிம்களும் சுகமாய் வாழ வழி கிடைத்ததா? வாழ்ந்தாலும் பத்து கோடி வீழ்ந்தாலும் பத்து கோடி என்று கோஷமிட்டீர்களே! இன்று நிலைமை என்ன? 5 கோடி முஸ்லிம்களையும், அவர்கள இதற்கு முன் அனுபவித்த உரிமைகளையும், விசேஷ சலுகைகளையும் இழந்து, பிறரை கெஞ்சக் கூடிய நிலையில் விட்டுவிட்டு, பாகிஸ்தானில் போய் கவர்னர் ஜெனரலாகவும், பிரதம மந்திரியாகவும், வர்த்தக மந்திரியாகவும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவராகவும் சுகமாய் இருந்து கொண்டு, உங்களையும் அங்குவர அனுமதிக்க முடியாதென்று சொல்லிவிட்டார்களே! இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்? இந்தியா பூராவிலுமுள்ள முஸ்லிம்கள் 10 கோடியும், அடிமையாய் வாழ்வதை விட பாகிஸ்தானிலுள்ள 5 கோடி முஸ்லிம்களாவது சுதந்திரமாய் வாழ வழி செய்தோம் என்று வெட்கமில்லாமல் இன்னும் எத்தனை நாட்களுக்குச்சொல்லப் போகின்றீர்கள்? இன்று 5 கோடி முஸ்லிம்களும் அடிமைகளாக வாழ்கின்ருேமென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்னே! உங்களின் மதிமயக்கம்!! என்னே உங்களின் அறியாமை!!! உண்மையில் மதராஸில் கூடிய முஸ்லிம் லீக் கவுன்ஸிலில் சென்ற கால தவறுக்கு வருந்தி உங்களுக்குச் சரியான வழிகாட்டுமென்று எதிர்பார்த்தோம். அவர்களும் பழைய தவருன தற்கொலைக்கொப்பான வழிக்கு, புது மெருகு கொடுத்து தீர்மானம் செய்திருக்கிருர்கள், இவைகளை உணர்ந்து பலர் முஸ்லிம் லீகிலிருந்து ராஜினமா செய்து வருகின்ருர்கள். இனியாகிலும் நீங்கள் பழைய தவறை உணர்ந்து, முஸ்லிம் லீகை விட்டுவிட்டு - இப்பொழுது முஸ்லிம் லீகை கட்டி அழும் தலைவர்களுக்கு சரியான பாடம் கற்பித்து விட்டு மற்ற மாகாண முஸ்லிம்கள் செய்த விவேகமான முடிவை பின் பற்றி - உங்களுக்கு அன்றும் இன்றும் சரியான நேர்வழி காட்டி வருபவரும், நம் அதிர்ஷ்ட வசத்தால், நம்மிடையேயிருந்து நமக்கு இன்று ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு பரிகாரம் தேடித் தந்து கொண்டும் (உதாரணமாக டில்லியில் 131 மஸ்ஜீத்களை முஸ்லிம்களிடம் திரும்ப வாங்கிக் கொடுத்தும்) இருக்கும் அரசியல் மத அறிஞர் அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் காட்டும் வழியை பின்பற்றி இந்திய யூனியனில் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழிவு நிலைமையை நீக்கிக் கொள்ளுங்கள். இன்றேல்! உங்கள் கதி அதோகதியாகு மென்பதை தலைப்பில் கூறிய திருக்குர் ஆன் வாக்கியத்தின் மூலம் எச்சரிக்கை செய்கிறேன்.

இங்ஙனம்,
த. கா. மு. முஹம்மது யூசுப்,
கடையநல்லூர்.


"ஆஸாத்"
(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை)

தற்கால அரசியல் அறிவு வளர்ச்சியடைய அவசியம் படிக்கவேண்டும். சிக்கலான அரசியல் உலகத்தில் இன்று 'ஆஸாத்' சமூகத்தை நேரான பாதையில் முன்னேறச் செய்கிறது. சொற்ப காலத்தில் புது அரசியல் உணர்ச்சியை எங்கும் உண்டாக்கியிருப்பதை தாங்கள் கவனித்திருக்கலாம். உங்கள் ஊரில் 'ஆஸாத்' ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. 'ஆஸாத்'' சந்தாதாரர்களாக ரூ. 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்,
"ஆஸாத்"
கும்பகோணம்.

# அடக்கு முறையை மக்கள் வெறுப்பர்

## இதுவா இஸ்லாமிய சகோதரத்துவம்?

—( பாதுஷாகான் )—

கராச்சி, 5—3—48

"பாகிஸ்தான் ஆட்சிக்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு மிடையே எவ்வித வித்தியாஸமும் இருப்பதாக எனக்குப் படவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியைவிட இன்று பாகிஸ்தானில் லஞ்சத் தாண்டவம் அதிகம்." பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபையில் முதல் தடவையாக பேசிய பாதுஷாகான் மேற்கண்டவாறு கூறினர்.

"இன்று நம்முடைய ஆட்சி முறை, பிரிட்டிஷ் ஆட்சி முறையின் பழைய கொள்கைகளை அனுசரித்தே இருக்கின்றது."

"இந்தியாவில் இந்தியர்களே கவர்னர்களாய் இருக்கின்றனர். மேலும் ஒரு இந்திய மாதும் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனல் இங்கு வெள்ளையர்கள் கவர்னர்களாய் இருக்கின்றனர். எல்லைப் புரத்திலிருந்து நாம் வெளியேற்றிய ஒரு வெள்ளையன் இன்று மீண்டும் நம் தலைமீது சுமத்தப் பட்டிருக்கிறான். இதுதான் இஸ்லாமிய சகோதரத்துவமா? என்று கேட்டார்.

அவசர சட்டப் பிரயோகத்தை பாதுஷாகான் வன்மையாகக் கண்டித்தார். அடக்கு முறையால் தற்காலிகமாகவே ஆள முடியுமென்றும், மக்கள் அதை வெறுக்கின்றனர் என்றும், அடக்குமுறையை கையாளுபவர்களை பொது ஜனங்கள் வெறுப்பரென்றும் எச்சரித்தார்.

மாகாண உணர்ச்சியை தூண்டுவதாக அவர்மீது சாட்டப்பட்ட குற்றத்தை ஆட்சேபித்து பேசுகையில் "சிந்து, பஞ்சாப், வங்காளத்தில் மாகாண உணர்ச்சியை நானா தூண்டினேன்? என்று கேட்டார்.

கஸன்பர் அலி இடைமறித்து "நமக்கு மாகாண உணர்ச்சியில் நம்பிக்கையில்லை. நாம் பாகிஸ்தானையே ஆதரிக்கின்றோம்" என்றார்.

பாதுஷாகான் "மாகாண உணர்ச்சியை கற்றுக் கொடுத்தது பஞ்சாப்தான்" (சிரிப்பு)

பட்டாணிஸ்தான் கோரிக்கையை விவரிக்கையில் "பாகிஸ்தானுக்குள்ளேயே பட்டாணியர்கள் அனைவருக்காகவும் ஒரு சுதந்திர பிரதேசத்தை நாம் கோருகிறோம். பட்டாணியர்களை ஒன்று திரட்டும் வேலையில் நீங்கள் நம்முடன் ஒத்துழைக்கவேண்டுமென நாம் விரும்புகிறோம்" என்று பாதுஷாகான் கேட்டுக்கொண்டார்.

கஸன்பர் அலி "பாகிஸ்தானை பலப்படுத்த வேண்டிய வேலை இன்னும் பாக்கி இருக்கிறது"

சுஹ்ரவர்த்தி, "முஸ்லிம் லீக் மூலமல்ல"

சகிப்பு தன்மையை வற்புறுத்தி பாதுஷாகான் மேலும் கூறினர் "பாகிஸ்தான் அமைப்பு பிரத்தியட்ச உண்மையாகிவிட்டது. இனி அதை எப்படி நிர்வகிப்பதென்பதே பிரச்னை. பாகிஸ்தான் ஒரு ஏழை நாடு. முதலாளிகளின் நலன்களுக்காக அதை ஏன் உபயோகிக்க வேண்டும்? ஏழைகளின் மீது வரிகளை எதற்காக சுமத்த வேண்டும்?

கலீபாக்களின் நிர்வாக முறையை குறிப்பிட்டு விட்டு அவர் "அந்த முறை நமக்கு வழிகாட்டுகின்றது. ஆனல் அதற்காக நாம் தியாகம் செய்ய தயாராய் இருக்க வேண்டியதவசியம். சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டாலன்றி பாகிஸ்தானை பெரிய நாடாக நாம் செய்ய முடியாது" என்று அறிவுறுத்தினர்.

"பாகிஸ்தானில் இஸ்லாமிய அரசியல் பொருளாதார சமத்துவம் அமுலுக்கு வர வேண்டும். நீங்கள் பொதுமக்களின் சேவகர்களாக இருக்க வேண்டும். பாகிஸ்தான் எல்லோருக்கும் சொந்தம், பாகிஸ்தான் ஆட்சி பொதுமக்களுக்கு சொந்தமானது. வெளிநாடுகளிலிருந்து தொழில்நிபுணர்களைவரவழைக்கலாம். அதனல் நிர்வாகிகளை தருவிப்பது சரியல்ல. பாகிஸ்தான் நிர்வாகம் பொதுமக்கள் கையிலிருக்க வேண்டும். வெள்ளையர்கள் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். மேலும் வெள்ளையர்கள் தருவிக்கப் படுகின்றனர். அது பாகிஸ்தானுக்கு நல்லதல்ல."

(7-ம் பக்கம் பார்க்க)

# கடிதங்கள்.

## முள்ளங்குடி

மகாத்மாஜியின் ஞாபகார்த்தமாக கிராம காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் 14—3—48 மாலை 4-மணிக்கு தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் T. K. சீனிவாச அய்யர் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் கிராம சீர்திருத்தம், சமூக ஒற்றுமை, தீண்டாமை விலக்கல், தற்கால அரசியல் நிலைமை என்பது பற்றி தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி திரு T. N. ராமச்சந்திரன், அ. இ. கா. க. மெம்பர் திரு G. சுப்பையா பிள்ளை, குடந்தை ஜனுப் யாகூப்கான், S. T பானு, கு. தா. கா. க. தலைவர் ஜனுப் அப்துல் மஜீது, காரியதரிசி R. பக்கிரிசாமி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள் திரு S. S. குழந்தைவேல் செட்டியார் வந்தனோபசாரத்துடன் இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

**வைத்தினாதன்,**
காரியதரிசி

## சிவகங்கை

10—3—48 இரவு 7-45 மணிக்கு அரண்மனை வாசல் முன்பாக நகர காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் இ. ஜி கா. கமிட்டி தலைவர் ஸ்ரீ சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ K காமராஜ் அவர்களுக்கு பல சங்கங்களின் சார்பாக மாலைகள் போடப்பட்டன. பின்னர் காமராஜ் அவர்கள் 'சுதந்திர இந்தியாவில் மக்களின் கடமை' என்பதைப் பற்றியும் 'காங்கிரஸும் இதர கட்சிகளும்' என்பது பற்றியும் விரிவாக சொற்பொழிவாற்றினர்.

K S குப்புசாமி, கா. வெ. சேதுராமச்சந்திரன், R. ராமானுஜம், சாத்தூர் ராமசாமி நாயுடு, ஸ்ரீனிவாஸய்யர் முதலியோர்கள் பேசிய பின்னர் மு. மாணிக்கம் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

**மு மாணிக்கம்.**
காரியதரிசி

## பன்ருட்டி

9—3—48 இரவு நூர் முகம்மது ஷா அவுலியா அவர்கள் தர்க்காவில் மகாத்மாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை நடந்தது. 10—3—48 காலை தர்க்காவில் 2,000 ஏழைகளுக்கு முஸ்லிம்களால் போஜனமளிக்கப்பட்டது. மாலை 7-மணிக்கு பிரபல வியாபாரியும், யூனியன் போர்டு மெம்பருமான ஜனுப் P S. ஷேக் மொய்தீன் சாஹிப் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேபி வாசுகியும், சின்னசாமி செட்டியாரும் தேசிய கீதம் பாடினர். அ. ச. பீர் முகம்மது ராவுத்தர், S. G. தேவநாதஞ் செட்டியார், ஹெட்மாஸ்டர் ரகூப் சாகிப், 'ஆஸாத்' ஆசிரியர் ஹக்கீம் சகோதரர், K. சுப்பராயலு முதலியோர்கள் மஹாத்மாஜீயின் ஆத்மா சாந்தியடைய அவர் வழியை பின்பற்றவேண்டுமென வற்புறுத்தி உணர்ச்சி ததும்ப பேசினார்கள், வந்தனோபசாரத்துடன் 11-15-க்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

## காரைக்குடி

அண்ணல் மகாத்மாவின் அஸ்தியை காரைக்குடி நகர காங்கிரஸ் கமிட்டியாரிடம் ஒப்புவித்து நகரில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தரிசிக்கச் செய்த பாரட்லா அழகப்பா அவர்களுக்கு கமிட்டியின் சார்பாகவும் பொதுமக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**டாக்டர் V. S. S. மணி.**

## மைசூர்

அன்புடையீர்!

கட்சி பிரிவுகளையும் அபிப்பிராய பேதங்களையும் பெரிதாக்கி அதையே தொழில் முறையாகப் பயன்படுத்திக்கொண்டு இன்று தமிழ்நாட்டிலிருந்து சில பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. இந்நிலையில் உள்ளதை உள்ளபடி வெளியிடவும் ஒற்றுமைகாணவும் துணிந்து முன் வந்துள்ள தங்கள் 'ஆஸாத்' ஐப் பற்றியறிந்து மகிழ்கிறேன்.

அன்பன், பரதேசி

## ஈரோடு

'ஆஸாத்' ஆசிரியர் அவர்களுக்கு,

உங்கள் 'ஆஸாத்' தமிழ் தேசிய வார வெளியீடு இதழ்களை பார்த்தேன். நன்றாகவும், தெளிவாகவும் விளங்கக் கூடிய முறையில் அரசியல், ஹிந்து முஸ்லிம் கடமை, முதலியவைகளைப்பற்றி வெகு அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். மேலும் தமிழ் நாட்டில் வகுப்புவாத மத வெறியர்களுக்கு பத்திரிகை வாயிலாக மருந்து கொடுக்க யாருமில்லையா என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அதிர்ஷ்டவசமாக உங்கள் ஆஸாத் வாரவெளியீடு வாயிலாக வாரம் ஒரு முறையாவது வகுப்புவாத மத வெறியர்களுக்கு மருந்து கொடுத்து, குணமடையச் செய்கின்ற உங்கள் 'ஆஸாத்' இந்தியாவுக்கும் முக்கியமாக தமிழ் நாட்டிற்கும் வழிகாட்டியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இப்படிக்கு,
**E. V. அங்கமுத்து**

சென்ற வாரத் தொடர்ச்சி.

# —: புனர் வாழ்க்கை. :—

(o)

ஹிந்து முஸ்லிம் பிரச்னைக்கும், முஸ்லிம் மைனாரிட்டி பிரச்னைக்கும் ஒரே ஒரு வழி பாகிஸ்தான் என்று சொல்லப்பட்டது. பாகிஸ்தானால் மைனாரிடி முஸ்லிம் பிரச்னை தீரமுடியாதென்று நாம் சொல்லி வந்ததை அன்று முஸ்லிம் சகோதரர்கள் நம்பவில்லை. முன் எச்சரிக்கையாக, வரப்போகும் விஷயங்களை குறித்து முன் கூட்டியே அறிவித்தவர்களை, முஸ்லிம் சகோதரர்கள் நம்பத் தயாரில்லை, காரியங்கள் நடந்தேறியபிறகுதான் அவர்கள் அரசியலை புரிந்து கொள்கிறார்கள்.

பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டது. முஸ்லிம் மைனாரிட்டியின் பிரச்னை தீர்ந்தபாடும் இல்லை. ஹிந்து, முஸ்லிம் கலகங்கள் தற்சமயம் அடங்கியிருப்பினும், பாகிஸ்தானால் ஏற்பட்ட பிரச்னைகள் தீர்ந்த பாடில்லை. முஸ்லிம் லீகின் விபரீதப் போக்கை நம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவர்கள் பாகிஸ்தான் முஸ்லிம்களைத்தான் முஸ்லிம்கள் என்று நினைக்கின்றனர் போலும்!

ஹிந்து மெஜாரிடி மாகாண முஸ்லிம்கள் உயிர் வாழ்வது பாகிஸ்தானுக்காகவும், அவர்களுடைய ஓட்டு உரிமை முஸ்லிம் லீகுக்காகவும், சரீரம் பாகிஸ்தான் ஸ்தாபிப்பதற்கு ஒத்துழைப்பதற்காகவும், பாகிஸ்தானுக்கு நன்கொடை அளிப்பதற்காகவும், பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு அதைவிட்டு வெளியே இருப்பதற்காகவும், சமயம் வந்தால் பாகிஸ்தானுக்காக பலியிடுவதற்கு மட்டும்தான் உரிமை உள்ளவர்கள் என்று லீக் லீடர்கள் எண்ணுவதாக அவர்களுடைய பேச்சுகளிலிருந்தும்,செய்கைகளிலிருந்தும் வெளிப்படுகின்றது.

பாகிஸ்தானுக்குள் பிரவேசிக்க விரும்பும் முஸ்லிம்கள் பாகிஸ்தான் மூலதனத்தை அதிகப்படுத்துவதற்காக பணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அல்லது பாகிஸ்தான் ரயில்களை ஓட்டுவதற்கும், தந்தி, தபால் இலாகாக்களை நடத்துவதற்கும் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். பொதுவாக அவர்கள் உயிருடன் இருந்தால் 'காய்தே ஆஜம் ஸிந்தாபாத்' போடுவதற்காகவும், கொல்லப்பட்டால் பாகிஸ்தானை பலப்படுத்துவதற்காகவும் இகத்திலும், பரத்திலும் பாகிஸ்தானுக்கு அர்ப்பணம் செய்ய தகுதியுள்ளவர்கள் என்று லீக் லீடர்கள் நினைக்கின்றார்கள்.

பாகிஸ்தானில் இருக்கும் முஸ்லிம்களின் அளவே ஹிந்துஸ்தானிலும் முஸ்லிம்கள் இருக்கின்றனர். காய்தே ஆஜம் அவர்களை ஸிம்மாசனத்தில் உட்கார வைத்து மகுடாபிஷேகம் செய்து கண்குளிர பார்ப்பதற்காக 4½ கோடி முஸல்மான்களை எதற்காக பலியிட வேண்டுமென்று கேட்கின்றோம்? ஹிந்துஸ்தானிலுள்ள முஸ்லிம்களைக் காட்டிலும், பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்கள் எவ்விதத்தில் உயர்ந்தவர்கள்? முஸ்லிம் ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தாலும் ஐக்கிய மாகாணத்தில் மட்டிலும் 86 லக்ஷம் முஸ்லிம்கள் இருக்கின்றனர். எல்லைப்புறம், ஸிந்து, பலுஜிஸ்தான் ஆகிய இம் மூன்று மாகாணங்களிலிள்ள மெஜாரிடி முஸ்லிம்களின் மொத்த எண்ணிக்கையைவிட ஐக்கிய மாகாணத்தில் 20 லக்ஷம் முஸ்லிம்கள் அதிகமாக இருக்கின்றனர். பாகிஸ்தானின் முதுகெலும்பு என்று சொல்லப்படும் பஞ்சாப் மாகாண மெஜாரிடி முஸ்லிம்களின் எண்ணிக்கை, ஐக்கிய மாகாண மைனாரிடி முஸ்லிம்களின் எண்ணிக்கையைவிட சிறிதளவுதான் அதிகம். ஸிந்து, எல்லைப்புறம் இரண்டு மாகாண முஸ்லிம்களைவிட சென்னை ஒரு மாகாணத்தில் மட்டிலும் முஸ்லிம்கள் அதிகமாக இருக்கின்றனர். ஒரே ஒரு பீகார் மாகாண மைனாரிடி முஸ்லிம்களின் எண்ணிக்கை ஸிந்து, பலுஜிஸ்தான் மெஜாரிடி முஸ்லிம் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகம். நாகரீகம் கலாசாரம், கல்வி முதலிய விஷயங்களிலும் பஞ்சாப், ஸிந்து, வங்காள முஸ்லிம்கள் ஐக்கிய மாகாண முஸ்லிம்களைவிட எவ்விதத்திலும் மேம்பட்டவர்களல்ல. ஐக்கிய மாகாணமும், பீஹாரும் இந்தியாவில் இஸ்லாமியக் கல்வியை பரப்பியமாகாணங்கள். இன்றைக்கும் இஸ்லாமிய நாகரீகத்திற்கு உறைவிடமாக இருப்பவை. முஸ்லிம் சாம்ராஜ்யத்தின் கம்பீரமான பழைய ஞாபகச் சின்னங்களும் இங்குதான் இருக்கின்றன. முஸ்லிம் பெரியார்களின் சமாதிகளும் இங்குதான் இருக்கின்றன. முஸல்மான்களின் 1,000 வருஷத்துப் போராட்டத்தின் ஞாபகச்சின்னமான உருது பாஷையின் கோட்டைகளாக விளங்குகின்றன ஆயினும் இஸ்லாமிய நாகரீகத்திற்கும், கலாசாரத்திற்

கும், பாஷைக்கும் காவலாளியென பறைசாற்றிவந்த முஸ்லிம் லீக் இன்று இப்பிரதேசங்களை ஹிந்து ராஜ்யமென்று சொல்லி அவர்களிடமே ஒப்படைத்துவிட்டது. நடந்தது நடந்தேறியேவிட்டது. பாகிஸ்தான் நல்லதோ கெட்டதோ நமக்கு கவலை வேண்டாம். பாகிஸ்தானாச்சு, அவர்களாச்சு. எப்படியோ போகட்டும். இனியும் முஸ்லிம் சகோதரர்கள் பாகிஸ்தான் பலிக்கடாவாகவே வாழப் போகின்றார்களா? அல்லது தங்களைப்பற்றியும் சிந்திக்கப் போகிறார்களா? பாகிஸ்தானைப்பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் படித்து மனத்திருப்தியுடன் மிஸ்டர் ஜின்னாவின் அசரீரி வாக்கை எதிர்பார்த்திருக்கப் போகிறீர்களா? என்று இந்திய முஸல்மான்களை கேட்கின்றோம். எரிமலை சிகரத்தில் உட்கார்ந்திருக்கும் தங்கள் நிலைமையை முஸ்லிம் சகோதரர்கள் உணரவில்லை. எரிமலை என்று வெடிக்குமோ யாருக்குத் தெரியும்? இனியும் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளவில்லையானால் ஸ்பெயின் தேசத்திலிருந்து அழிக்கப்பட்டதைப்போலவே அழிய நேரிடும் என்பதை எச்சரிக்கின்றோம்.

### பரிகாரம் என்ன?

இனி நாம் செய்ய வேண்டியதென்ன என்பதுதான் பிரச்னை. ஒரே ஒரு வழிதான் நமக்கு உண்டு. நியாயமான, கண்ணியமான வழியாகும். மனப்பூர்வமாக இந்த நாட்டை நம்முடைய நாடாகவே பாவிக்க வேண்டும். நவ இந்தியாவை நிர்மாணிக்கும் வேலையில் மெஜாரிடி சமூகத்தாருடன் ஒத்துழைக்க வேண்டும். பாகிஸ்தானுக்கு போகப்போவதில்லை. இந்த நாட்டிலே இந்த நாட்டு மக்களுடனேயே இருக்கப் போகின்றோம் என்று நினைப்பது உண்மையானால் இதைத் தவிர வேறு வழியில்லை. இந்த கொள்கையைதான் மேற்கொண்டாக வேண்டும்- முஸ்லிம் லீக் அரசியலுக்கு இந்த நாட்டில் இனி வேலையில்லை. பாகிஸ்தான் பிரஜையாக வாழ விரும்பினால் இந்த நாட்டில் பிரஜா உரிமையுடன் சகல உரிமைகளையும் இழக்கவேண்டியதாக நேரிடும். அல்லது ஹிந்துஸ்தான் பிரஜையாகவே இருந்துவிட்டால் பாகிஸ்தானுக்கு அவர்கள் விஷயத்தில் தலையிட உரிமை கிடையாது இரண்டுவிதத்திலும் லீக் சகோதரர்களுக்கு ஏமாற்றத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. சர்வ தேச ஸ்தாபனத்திலும் இந்த பிரச்னை உள்நாட்டுப் பிரச்னையாகவே கருதப்படும்.

இன்று காலம் மாறிவிட்டது. நம்முடைய ஒத்துழைப்புக்காக ஹிந்து சகோதரர்கள் இனி ஆவலாய் இருக்கப் போவதில்லை. ஒத்துழைக்க நாமே முந்திக்கொள்ள வேண்டியதுதான் சரி. சமீபத்தில் ஐக்கிய மாகாண சட்டசபை லீக் அங்கத்தினரான ஜஹீருல் ஹஸன்லாரி சட்டசபையில் பேசும்பொழுது திடீர் பல்டியடித்து முஸல்மான்கள் ஒருதனி சமுதாயத்தினரல்ல. அவர்கள் ஒரு மைனாரிடி என்று பேசினார். ஹிந்து மெம்பர்கள் அதை சட்டை செய்யாமல் இருந்தது மிஸ்டர் லாரிக்கு மனக்கஷ்டத்தை அளித்தது.

இனி பாகிஸ்தானையும் இரண்டு சமுதாயக் கொள்கையையும் முஸ்லிம்கள் மறந்துவிடவேண்டும். வகுப்புவாத ஸ்தாபனங்களையும், சபைகளையும் கலைத்து பொது ஸ்தாபனமாகிய காங்கிரஸில் சேர்ந்து கூட்டுத் தொகுதிக்காகப் போராடி ஹிந்து வகுப்புவாத சக்திகளை முறியடித்து தேசீய மனப்பான்மையுள்ள ஹிந்து சகோதரர்களுடன் ஒத்துழைத்து இந்தியாவில் சோஷியலிஸ சர்க்கார் ஏற்படுத்த உழைக்கவேண்டும் என்பது நம்முடைய அபிப்பிராயமாகும். லீக் கொள்கைக்கு இனி இங்கு செலாவணி கிடையாது. ஹிந்து, முஸ்லிம்கள் தனி சமுதாயங்கள் என்று இனியும் லீகர்கள் சொல்லும் பக்ஷத்தில் ஹிந்துக்கள் அதை சிரித்த முகத்துடன் வரவேற்கத் தயார். இந்த நாடு ஹிந்துக்களுடையது என்பதுதான் அதற்கு அர்த்தம். அந்நிலையில் முஸ்லிம்களுக்கு ஓட்டுரிமை இருக்காது ஸ்தாவர சொத்துக்கள் வாங்கவோ, வியாபாரம் செய்யவோ, அரசாங்க உத்தியோகங்களை வகிக்கவோ முடியாது. 24 மணி நேர நோட்டீஸின் மூலம் நாட்டைவிட்டு வெளியேற்றிவிடமுடியும். கடந்த யுத்த காலத்தில் இங்கிருந்த ஜெர்மானியர்களை கைது செய்ததைப் போல் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் ஏதாவது சிறு சச்சரவு என்றால் எல்லோரும் கைது செய்து பாதுகாப்பில் வைக்கப்படுவார்கள். இரண்டு சமுதாயக் கொள்கையின் பலன் கைமேல் கிடைத்துவிடும். விஷயம் புரியாமலே நாம் இதுவரையில் இரண்டு சமுதாய கோஷத்தை வானளாவ போட்டு வந்துள்ளோம்.

இன்றுள்ள காங்கிரஸ் கட்சி இம்மாதிரி செய்யாது என்பது உண்மையே. வேறு ஏதாவது ஒரு கட்சி அதிகாரத்திற்கு வந்தால் கண்டிப்பாக இதைத்தான் செய்யும். காங்கிரஸ் ஹிந்துக்களிடையே செல்வாக்கிழந்து வருகிறது. காங்கிரஸ் முஸ்லிம் அனுதாபமுடையதாக இருக்கும் ஒரே காரணத்தால் (பீஹார்) ஹஜாபாக் ஜில்லா போர்டு தேர்தலில் எல்லா ஸ்தாபனங்களையும் தோற்க நேர்ந்தது. அலஹாபாத் கூட்டத்தில் பாபூ புருஷோத்தமதாஸை ஹிந்துக்கள் பேசவிடவில்லை. மூவர்ணக் கொடியை கிழித்து எறிந்தனர். காங்கிரஸிலிருந்து முஸ்லிம்களை நீக்கி

அதை ஒரு ஹிந்து ஸ்தாபனமாக மாற்றவேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சி செய்கின்றார்கள். காங்கிரஸின் தேசீயப் போக்கினால் அவர்கள் பொறுமை இழந்து வருகின்றனர். "முஸ்லிம்கள் ஒருகாலும் ஒத்துழைக்க மாட்டார்கள். ஆகையால் பொதுஸ்தாபனம் அமைக்கவேண்டாமென்று நாம் அன்றே சொன்னோம். முஸ்லிம்களை நீங்கள் திருப்தி செய்ய முடியாது. நீங்கள் தேசியத்திற்காக உயிர் விடுகிறீர்கள். ஆனால் அவர்களுக்கு தேசீயப்பற்று இம்மியளவும் கிடையாது. அவர்கள் மதம் என்றால் முன்வருவார்கள். 1921-ல் உங்களுடன் ஒத்துழைத்தார்கள் என்றால் அவர்களின் மத விஷயமான கிலாபத்தைப் பலப்படுத்துவதற்காக. அதன் பிறகு இதுவரையில் அவர்கள் ஒத்துழைக்கவே இல்லை. அன்றைக்கே காங்கிரஸை ஹிந்துஸ்தாபனமாக மாற்றியிருத்தல் வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இன்று இந்தியா பூராவிலும் ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்க முடியும். ஒரு சில முஸல்மான்களை காங்கிரஸில் சேர்த்துக்கொண்டு அதை ஒரு தேசியஸ்தாபனமாக வைத்துக் கொண்டிருந்தீர்கள் நேரு ரிபோர்ட்டைப் பார்த்து அவர்கள் பிரிந்து சென்றனர். உண்மையில் அதில் ஹிந்துக்களுக்கே தீங்கிழைக்கப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷ்காரர்கள் வகுப்புவாதத்தை ஊட்டினார்கள். அது முற்றிலும் ஹிந்துக்களின் நலன்களுக்கு பாதகமானது. அதன் மூலம் முஸ்லிம்களை தலைமேல் தூக்கிவைக்கப்பட்டது. ஆனால் நீங்கள் முஸ்லிம்களை திருப்தி செய்யும் ஒரே நோக்கத்துடன் அதை எதிர்க்கவில்லை. அப்படியும் முஸ்லிம்களை உங்களுடன் சேர்த்துக்கொள்ள முடியாமலே போய்விட்டது. ஆனால் ஹிந்துக்களின் குரல்வளையின் மேல் கத்தியும் தீட்டியாயிற்று. 1937-ல் எங்களுடைய பெருவாரியான ஓட்டுக்களைப் பெற்று நீங்கள் மந்திரிசபைகளை அமைத்தீர்கள். ஹிந்து ஓட்டுக்களின் மூலம் சட்டசபைகளில் நுழைந்த நீங்கள் ஹிந்துக்களுக்காக உழைத்திருக்க வேண்டும். ஆனால் தேசீயம் என்ற போர்வையில் எப்பொழுதுமே நீங்கள் முஸ்லிம்களுக்கு வால்பிடித்து வந்தீர்கள். வகுப்புவாதி என்ற கெட்ட பெயர் வந்துவிடுமோ என்று அஞ்சி நீங்கள் ஹிந்துக்களுக்காக ஒன்றுமே செய்யவில்லை. ஆனால் முஸ்லிம்கள் உங்களை உலகம் பூராவிலும் தூற்றினார்கள். அக்கிரமக்காரர்கள் என்றும் அடக்குமுறை ஆட்சியென்றும் உலக முழுவதும் பறைசாற்றினர். பொய்யே உருவமெடுத்த பீர்ப்பூர் ரிபோர்ட் எழுதி உங்களுடைய கௌரவத்தை குலைக்க உலகத்திற்குமுன் சமர்ப்பித்தனர். உங்களுடைய மந்திரிசபைகளைத் தகர்க்க தங்கள் முழு சக்திகளையும் செலவு செய்தனர். சற்றும் தயங்காமல் பாடம் கற்பிப்பதை விட்டு, முஸ்லிம்களுடைய செய்கைகளை பொறுமையுடன் சகித்து வந்தீர்கள். ஆயினும் முஸ்லிம்கள் உங்களை சபிப்பதை விடவில்லை. மந்திரிப்பதவிகளை விட்டு நீங்கள் வெளிவந்தநாள் முஸ்லிம்களால் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டது. அத்துடன் நிற்காமல் தேசத்தை துண்டாட வேண்டுமென்றும் கோரினர். அதைப்பார்த்தும் உங்களுக்கு விழிப்பு ஏற்படவில்லை. காங்கிரஸை ஒரு பொதுஸ்தாபனமாகவே வைத்திருந்தீர்கள். முழு பலத்துடன் பாகிஸ்தானையும் எதிர்க்காமல் ஆட்டுக்குட்டியைப்போல் சாதுவாக இருந்து வந்தீர்கள். முடிவில் நாடும் துண்டாடப்பட்டது. ஹிந்துக்களின் நாட்டையும் கொடுத்து, அத்துடன் இரண்டுகோடி ஹிந்துக்களும் அடிமைகளாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். அடிக்கும், தடியடிப் பிரயோகத்திற்கும், சொத்து பறிமுதலுக்கும், சிறைக்கூடங்களுக்கும், துப்பாக்கிக் குண்டுகளுக்கும், தூக்கு மேடைகளுக்கும் இலக்கானவர்கள் ஹிந்துக்கள். ஆனால் பாகிஸ்தான் கிடைப்பது முஸல்மான்களுக்கு. காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் ஹிந்துக்களின் குரல்வளையை நசுக்கி, 75-ஐயும் 25-ஐயும் சரிசமமாகச் செய்தீர்கள். சரிசமப் பிரதிநிதித்துவத்தை ஏற்று முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்தை அளித்தீர்கள்! எங்களுடைய ஓட்டுகளை கொடுத்து எங்களின் விதியை நிர்ணயிக்கும் உரிமையை வழங்கி, பதவிகளில் உங்களை அமர்த்திய செய்கைக்கு எங்களுக்கு கிடைத்த பலன் இதுதான். ஹிந்தியைவிட்டு முஸ்லிம்களின் பாஷையாகிய உருதுவை ஹிந்துஸ்தானி என்று பெயர் வைத்து அதை தேசீய பாஷையாக்கவும் நீங்கள் முயற்சித்தீர்கள். இவ்வளவும் செய்த பிறகும்கூட நீங்கள் அவர்களைத் திருப்தி செய்யமுடியாமலேயே போய்விட்டது. இன்னும் முஸ்லிம்களிடம் உள்ள அனுதாபத்தை நீங்கள் விட்டபாடுமில்லை காங்கிரஸை ஹிந்து ஸ்தாபனமாக மாற்றவுமில்லை. அது மட்டுமல்ல. அவர்கள் நம்மைக் கொன்று குவித்தார்கள். நம்முடைய குழந்தைகளை வெட்டி வீழ்த்தினார்கள். நம்முடைய பெண்களை மானபங்கம் செய்தார்கள். நம்முடைய வீடுகளையும், கடைகளையும் கொளுத்தினார்கள். பதிலுக்கு பதில் நாம் செய்ய முன்வந்தபோது நீங்கள் குறுக்கே வந்து துப்பாக்கிகளைக்கொண்டு சுட்டுத் தள்ளினீர்கள். மஹாத்மா காந்தியும், பண்டித நேருவும் முஸ்லிம்களைக் காப்பாற்ற கச்சைக் கட்டிக்கொண்டு குறுக்கே நின்றனர். இன்று நாடு துண்டாடப்பட்டு விட்டது. முஸ்லிம்களுக்கும் பாகிஸ்தான் கிடைத்துவிட்டது. நியாயமாக ஹிந்துஸ்தான் ஹிந்துக்களுக்கே சொந்தம். இங்கிலையிலும் காங்கிரஸின் தேசீயப் பித்தலாட்டம் போகவில்லை. ஹிந்துக்களுக்கு சொந்தமான இந்த நாட்டையும் எல்லோருக்கும் பொதுவாக்க முயற்சிக்கின்றீர்கள்.

அப்படியும் முஸ்லிம்கள் உங்களுடன் ஒத்துழைக்கத் தயாரில்லை. அவர்கள் தங்களை தனி சமுதாயத்தின ரென்றே இன்றைக்கும் சொல்லுகின்றனர். இதை நாம் இனியும் சகித்துக்கொண்டிருக்கப் போவதில்லை. எங்களுடைய வோட்டுக்களை வாங்கி எங்களுக்கே வேட்டு வைக்கும் வேலையை இனி பொருக்கமாட்டோம். தேசியத்தைத் தூக்கி எறிந்து முஸ்லிம்களின் எண்ணத்தை மறந்து காங்கிரஸை ஹிந்து ஸ்தாபனமாக்கி, ஹிந்துக்களின் சமூக முன்னேற்றத்திற்காக உழைக்க உடனே முன்வரவேண்டும். இல்லையேல் நாம் காங்கிரஸைவிட்டு ஹிந்து மஹாசபையில் சேர்ந்து கொள்ள தயாராயிருக்கின்றோம். தேசிய முஸல்மான்களும் முஸ்லிம் ஒற்றுமைப் பக்தர்களேயாவர். முஸ்லிம்களில் பலர் காங்கிரஸிற்கு வெளியேயிருந்து கொண்டு பாகிஸ்தானைக் கேட்டனர். இன்றும் சிலர் உள்ளேயே இருந்துகொண்டு பாகிஸ்தான் வாங்கிக் கொடுக்க உதவி செய்தனர். லீக் முஸ்லிம்களும், தேசிய முஸ்லிம்களும் ஒரே நாணயத்தின் இரண்டு முகங்கள். மந்திரி தூது கோஷ்டியுடன் பேச்சு வார்த்தை நடத்த லீக் சார்பில் வந்தவரும் ஒரு முஸ்லிம். ஹிந்துக்கள் சார்பில் பேசச் சென்றவரும் ஒரு முஸ்லிம் மௌலானாதான். ஹிந்துக்கள் சார்பில் சென்ற மௌலானாவின் மொழிபெயர்ப்பாளராகச் சென்றவரும் ஒரு முஸ்லிமே. இனியும் நீண்ட நாள் நம்முடைய கண்களிலே மண்ணைத்தூவ முடியாது.

நாம் வகுப்பு வாதிகள் என்பதில் சந்தேகமேயில்லை. நாம் ஹிந்துக்களாகவும், வகுப்பு வாதிகளாகவும் இருப்பதைக் குறித்து பெருமை யடைகின்றோம். காங்கிரஸை ஒரு ஹிந்து ஸ்தாபனமாக்குவோம். ஹிந்துஸ்தானில் ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிப்போம். நிச்சயமாக ஸ்தாபித்தே விடுவோம். நம்முடைய ராஜ்யத்தில் இருக்கவிரும்புவோர் இருக்கட்டும். இல்லையேல் நம் நாட்டைவிட்டு வெளியேறட்டும்" என்ற மனப்பான்மை இன்று பாமர ஹிந்துக்களிடையே நிலவி வருகின்றது.

கல்கத்தா, நவகாளி, பஞ்சாப், எல்லைப்புற சம்பவங்களுக்குப் பிறகு முஸ்லிம்களை தங்களுடைய விரோதிகள் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஹிந்து என்ற ஹோதாவில் உள்ள ஒருவன் அதை சரியல்லவென்றும் சொல்லிவிடமுடியாது. இந்நிலையில் காங்கிரஸ் முஸல்மான்களை சகோதரர்கள் என்று சொல்லும்போது காங்கிரஸின்மேல் அவர்கள் வெறுப்படைவது சகஜமே. ஆனால் காங்கிரஸ் இம்மாதிரியான சில்லரை சச்சரவுகளில் கவனத்தை செலுத்தத் தயாரில்லை. அதனுடைய லட்சியம் உயர்ந்தது. கடமை மஹத்தானது. தங்கள் உயரிய, தூய்மையான சுதந்திர லட்சியத்தை அடைய அது எவ்விதத் தியாகத்திற்கும் தயார். பெருங்காரியத்தை சாதிக்க, சில்லரை விஷயங்களை அது அலட்சியம் செய்தேயாகவேண்டும். முன்னேற்றமுள்ள பலம் வாய்ந்த ஜனநாயக இந்தியாவை நிர்மாணிக்க 10 கோடி முஸ்லிம்கள் அல்ல, 10 லக்ஷம் முஸ்லிம் மக்களேயானாலும் அவர்களை விட்டுவிடமுடியாது. எனவே வழி தவறிய ஒரு சகோதரனைப்போல் காங்கிரஸ் முஸ்லிம்களுக்காகக் காத்திருந்தது. முஸ்லிம்கள் காங்கிரஸில் சேருவதால் இந்தியா பலமடையும் என்பது உண்மையே. ஆசியா கண்டத்திற்கே தூண்டுகோலாகவும் இருக்கவேண்டியிருக்கிறது. சர்வ தேசிய அரங்கத்தில் வகுப்பு வாதிகள் என்றில்லாமல், மானிட வர்க்கத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் தேசமென்ற முறையில் தலை நிமிர்ந்து நிற்கவேண்டியிருக்கிறது. இந்நிலையிலுள்ள காங்கிரஸும் அதிலுள்ள ஹிந்துக்களும் சில்லரை விஷயங்களைப் பிரமாதப்படுத்துவதில்லை. ஆனால் இந்த நாட்டின் நன்மைக்காக ஒன்றுமே செய்யாத சிலர் இம்மாதிரியான சில்லரை விஷயங்களைப் பிரமாதப்படுத்துகின்றனர். 50 வருஷப் போராட்டங்களுக்குப் பிறகு காங்கிரஸ் நாட்டிற்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவுடன் ஹிந்து மஹாசபை நண்பர்களுக்கு திடீரென்று ஹிந்து உரிமைகளின் நினைவு வந்திருக்கிறது. முஸ்லிம்களுடன் சண்டை போடத் தயாராகவிருக்கும் இவர்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக ஹிந்துக்களை அடிமைகளாக்கி அடக்கியாண்டு வந்த ஆங்கிலேயர்களை எதிர்த்துப்போராடும் எண்ணம்கூட உதிக்காமலிருந்தது ஆச்சரியமேயாகும். மதத்தின் பெயரைச் சொன்னவுடனே தங்களுடைய பழைய ஊழியர்களையும், தலைவர்களையும் ஒதுக்கித் தள்ளி, பொறுப்பற்ற சுயநலமிகளின் வலையில் முஸ்லிம்கள் சிக்கிக்கொண்டதைப் போலவே இன்று மதத்தின் பெயரால் தூண்டப்படும் ஹிந்துக்களும் செய்வார்களானால் அது மிகவும் துரதிர்ஷ்டவசமான செய்கையாகும். ஹிந்து ராஜ்யம் ஸ்தாபிக்க முயற்சித்தால் மஹாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, ஜயப்பிரகாஷ் நாராயண், சர்தார் படேல் அவர்கள் தெரிவித்தபடி இந்திய சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பது முற்றிலும் உண்மை.

அடுத்து வரும் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுமா என்பது சந்தேகமே. மௌலானா அபுல் கலாம் ஆஸாத், மௌலானா ஹுஸைன் அகமத் மதனி, முப்தி கியாபதுல்லா, டாக்டர ஸையத் மஹ்மூது, டாக்டர் ஸைப்புத்தீன் கிச்லு, மிஸ்டர் அஸப் அலி இவர்களைப் போன்ற தன்னலமற்ற

உத்தமத்தலைவர்களை விட்டு, முஸ்லிம்கள் மிஸ்டர் ஜின்னு, நவாப் ஜாடா லியாகத் அலிகான், சுந்திரிகர், சர்தார் அப்துர் ரப்நிஷ்டர் இவர்களைப் போன்ற சுயநலமிகளின் வலையில் சிக்கிக்கொண்டதைப் போலவே, ஹிந்துக்களும் மஹாத்மா காந்தி, பண்டித நேரு, சர்தார் படேல், பாபு ராஜேந்திர பிரஸாத், ராஜாஜி போன்ற அரும் பெரும் தலைவர்களை அலக்ஷியம் செய்து ஸர். ஜ்வாலப் பிரஸாத், ஸ்ரீவத்ஸவா, போபத்கர், தர்பங்கா மகாராஜா போன்ற தேசிய விரோதிகளின் சூழ்ச்சியில் சிக்குவது முற்றிலும் சாத்தியமே. இன்று முதலாளிகள், ஜமீன்தார்கள், ராஜா, மஹாராஜாக்கள், ஹிந்து தர்மத்தின் கொடியை ஏந்தி, ஹிந்து உரிமைகள் என்று கூச்சலிட்டு ஒரு கூட்டத்தைத் திரட்டி தங்களுடைய நலன்களைக் காத்துக்கொள்ள முயற்சி செய்யக்கூடும். அந்நிலையில் இந்தியாவில் ஏற்படும் குழப்பத்தை ஒருவாறு நீங்களே ஊகிக்க முடியும். முஸ்லிம்களின் வகுப்புவாதம் ஹிந்துக்களின் மனதைக் கெடுத்ததுமட்டுமின்றி நல்ல காங்கிரஸ் ஊழியர்களையும் வகுப்புவாதிகளாக்கிவிட்டது.

## தேசீய முஸ்லிம் தலைவர்களைப் பின்பற்றுங்கள்.

இன்றுள்ள நிலைமையில் முஸ்லிம்கள் தீர்க்க யோஜனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. முஸ்லிம்களை ஒதுக்கித்தள்ளி அவர்களுடன் சண்டைபோடவேண்டுமென்று சொல்வது ஹிந்துக்களின் ஒரு கக்ஷி. முஸ்லிம்களைத் தங்களுக்குள் ஐக்கியப்படுத்தி சகோதரர்களாக வைத்திருக்க வேண்டுமென்பது காங்கிரஸ் கக்ஷி. இந்த இரண்டு கக்ஷிகளில் எந்த கக்ஷியுடன் சேரவேண்டுமென்பது முஸ்லிம்கள் முடிவு செய்யவேண்டிய விஷயம். காங்கிரஸின் தேசீயத்தைப் பலப்படுத்த தங்களால் இயன்ற யாவற்றையும் முஸ்லிம்கள் செய்யவேண்டியது அவசியமாகும். காங்கிரஸ் ஹிந்து ஸ்தாபனமாக மாறும் நாள் நிச்சயமாக முஸ்லிம்களுக்கு துக்க நாளாகத்தானிருக்கும். ஒரு நாள் இதே நேரு சர்க்காருக்கு முஸ்லிம்கள் கண்ணீர் வடிக்கவேண்டிவரும். வகுப்பு வாதிகள், ஆக்ரமிக்க முடியாமல் காங்கிரஸைப் பாதுகாக்கவேண்டும். வகுப்புவாத ஸ்தாபனங்களை நியமிப்பது சட்ட விரோதமாகச் செய்ய வேண்டும். லீகையும் மஹா சபையையும் கலைக்கவேண்டும். முஸ்லிம்களின் வழிகாட்டிகளாக அவர்களுடைய பழைய ஊழியர்களை முஸ்லிம்கள் அழைக்கவேண்டும். முஸ்லிம் சமூகம் உயிர் வாழ ஏதாவது சேவை செய்ய லீக் தலைவர்களால் முடியுமென்றால், அது அவர்கள் தலைமைப் பதவியினின்றும் விலகி மூலையிலே ஒதுங்கி உட்காருவது ஒன்றேதான். தலைவர்களைவிட சமூகத்தைப் பெரிதாக நினைப்பார்களானால் தலைவர்களுக்கு சீட்டு கொடுப்பதுதான் வழி. அப்படியும் கூட்டுத் தொகுதி முறையில் லீகர்களுக்கு இனி இடமில்லை. அதற்காக இன்று முஸ்லிம்களை காங்கிரசிலிருந்து விலக்கியே வைத்திருக்கவேண்டும் என்று லீகர்கள் எண்ணினல் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிர்காலம் இருக்கமுடியாது. கூட்டம் கூட்டமாக முஸ்லிம்கள் சேர்ந்து காங்கிரஸை பலப்படுத்த வேண்டும். ஹிந்து மஹாசபையின் எதிர்ப்பினுல் காங்கிரஸ் இழந்த ஓட்டுக்கள் முஸ்லிம்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். வகுப்புவாதிகளை எதிர்த்து அடுத்துவரும் தேர்தலில் வெற்றிபெற்று மந்திரிசபைகளை அமைக்க முஸ்லிம்கள் காங்கிரஸை ஆயத்தம் செய்யவேண்டும். அதைவிட்டு பைத்தியக்காரத்தனமாக காங்கிரஸைவிட்டு விலகி நின்ருல் காங்கிரஸ், ஹிந்து மஹாசபைப் பிடியில் போய்விடும். அல்லது தேர்தல்களில் மஹாசபையால் தோற்கடிக்கப்பட்டுவிடும். அந்நிலையில் மத்தியிலும் சரி, மாகாணங்களிலும் சரி ஹிந்து மஹாசபை மந்திரிசபைகள் அமையும். அது முஸல்மான்களுக்கு "மரண கண்டம்" என்றே சொல்லவேண்டும். முஸ்லிம்கள் விரும்புவது இதுவேயானுல் தாராளமாக அவர்கள் காங்கிரஸிலிருந்து விலகி இருக்கட்டும். புத்திமதி கூறி திரும்பத்திரும்ப நேர்வழியில் அழைத்துக் காலம் கடத்த அவகாசமில்லை. எந்த முடிவும் சீக்கிரம் செய்தாக வேண்டும். ஒரே மனிதன் முரண்பட்ட இரண்டு கொள்கைகளைப் பற்றி பேச முடியாது. சகோதரத்வம், ஒற்றுமை இவைகளைப் பற்றி லீகர்கள் எப்படிப் பேசமுடியும்? நேற்று வரையில் தனி சமுதாயத்தினர், தனி இனத்தினர், மாறுபட்ட கொள்கையை உடையவர்கள் என்று தொண்டை கிழிய கத்தியவர்கள் இன்று சகோதரத்வத்தைப் பற்றிப் பேசினுல் ஹிந்துக்கள் அதற்கு மதிப்புக் கொடுக்கத் தயாரில்லை. எனவே, இதுவரையில் தேசீயத்திற்காக உழைத்து வந்த தேசீய முஸல்மான்களின் தலைமையின் கீழ் முஸல்மான்கள் திரள வேண்டும். தேசீய முஸல்மான்களில் உள்ள அரசியல் வாதிகள், எழுத்தாளிகள், உலமாக்கள், அறிவாளிகளைக்குறித்து எவரும் பெருமையடையமுடியும். அவர்கள் தேசத்திற்காக தியாகம் செய்தவர்கள். காங்கிரஸிலும், ஹிந்துக்களால் செல்வாக்குள்ளவர்கள். இன்று நாடு அடைந்திருக்கும் சுதந்திரத்தில் அவர்களுக்கும் பங்கு உண்டு. தங்களுடைய தேசீய சேவையின் உரிமையைக்கொண்டு முஸ்லிம் உரிமைகளுக்காக அவர்கள் காங்கிரஸுடன் போராடவும் முடியும். காங்கிரஸும் அவர்கள் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கும். அவர்களைப் பொருத்து அவ

நம்பிக்கை கொள்ள காங்கிரஸ் தயாரில்லை. லீகர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த இப்பொழுது காங்கிரஸில் மெம்பர்கள் இல்லை.

மைனாரிடி முஸ்லிம்களின் விமோசனத்திற்கு எஞ்சியுள்ள வழி இது ஒன்றேதான். இந்த வழியைப் பின்பற்றவில்லையானால் அடுத்த தேர்தலுக்குப் பிறகு பிரஜா உரிமை இழக்கத் தயாராயிருங்கள். உங்கள் நாட்டில் நீங்கள் அன்னியர்களாக்கப்படுவீர்கள். உண்மையை மறைக்காமல் சொல்ல வேண்டுமாயின் உங்கள் போக்கு துடர்ந்து இப்படியே இருந்து வந்தால் மிஸ்டர் ஜின்னா விரும்பிவந்த ஜனமாற்றந்தான் நடந்தாகவேண்டும். இதை எல்லாம் சிந்தித்து முஸ்லிம்கள் உஜிதப்படி நடக்கட்டும்.

முஸ்லிம்லீகுக்கு பாகிஸ்தான் கிடைத்துவிட்டது. மைனாரிடி முஸ்லிம்களின் காலை வாரிவிட்டும் ஆய்விட்டது. விசுவாசமுள்ள இந்திய பிரஜையாக இருக்கும்படி மிஸ்டர் ஜின்னா புத்திமதியும் கூறி, அப்படிக்கில்லாத மைனாரிடியை எந்த அரசாங்கமும் சகித்துக்கொண்டிருக்காது என்றும் அறிவித்துவிட்டார். கவர்னர்-ஜெனரல் ஜின்னாவுக்கு ஏழை மைனாரிடி முஸ்லிம்களைப்பற்றி சிந்திக்க இனி அவகாசமேது? அகில இந்திய முஸ்லிம் லீக் கவுன்ஸில் கடைசியில் டில்லியில் கூடியசமயம் 400 மெம்பர்கள் இருந்தனர். பாகிஸ்தானை ஆதரித்து ஓட்டளித்தவர்கள் அதில் 100 பேர்தான் 8 பேர் எதிர்த்தனர். மைனாரிடி மாகாண பிரதிநிதிகளான 292 பேர் நடுநிலைமை வகித்தனர். கண்மூடித்தனமாய் பாகிஸ்தானை இந்த அறிவாளிகள் ஆதரித்துவந்தனர் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும். இனி லீக்கின் போக்கை முற்போக்கு நோக்கமுள்ள வாலிபர்கள் சகிக்கத் தயாரில்லை. ஹிந்து முஸ்லிம் என்று இனி அவர்களை ஏமாற்றமுடியாது. யாருடைய ஆட்சி ஏற்பட்டாலும் சரி, நாடு முன்னேறவேண்டும். தீரவேண்டிய பல பிரச்னைகள் சீக்கிரமே தீர்ந்து நாம் சுகமாக வாழவேண்டும். கிடைத்த சுதந்திரம் காக்கப்படவேண்டும். ஹிந்து முஸ்லிம் பிரச்னையில் நேரத்தை போக்க நம்மிடம் நேரமில்லை. வாலிபர்கள் தேசீயத்திற்காக சகல தியாகங்களுக்கும் தயாராகவேண்டும். நம்முடைய சுதந்திரத்திற்கு பல பக்கங்களிலிருந்தும் ஆபத்துக்கள் வரலாம். பிற்போக்கு சக்திகளை சிதற அடித்து எந்த விலையையும் கொடுத்து சுதந்திரத்தைக் காக்க நாம் ஒன்றுபட்டு நிற்போமாக!

(தொடரும்)

("மார்க்கத்தில் கண்ட கனி" என்ற மெட்டு)

# தேசியம்.

காலஞ்சென்ற செ. யி. ம. செய்யது அகமத் மௌலானா
(காலச்சந்திரன் பத்திராதிபர்)

1 வாழ்வு வளங்களால் ஏழைக்குதவும்
வகை கண்டுணர்வீரே—நானே
தாழ்வு நமக்கில்லை என்ற குணங்களைத்
தட்டிக்கழிப்போமே.

2 வாட்டுங் கலைப்பிணியாலே வருந்திடும்
மக்களைக் காப்போமே—நம்மைக்
காட்டிக்கொடுக்கும் கபோதிக்குணங்களைக்
காணாதொழிப்போமே.

3 தேசியமும் எங்கள் மார்க்க முறையென
தெளிந்து பகர்வோமோ—இந்தத்
தேசத்தின் செல்வம் சிதறவிடாமலே
சேர்ந்து வளர்ப்போமே.

4 நாட்டிற்குழைப்பதுவே நல்ல பேறென்று
நாடித்தொடுத்தோமே—எங்கள்
பாட்டியார் நூற்ற விராட்டினந்தன்னையும்
பங்கப்படுத்தோமே.

5 உணவுமுடைகளும் தேசியமாகவே
உண்டு சுகிப்போமே—இதைக்
கனவிலும் மறவாமல் காதலித்தோர்களை
கண்டு களிப்போமே.

6 கதருடையாலே கஷ்டமுந்தொலையும்
கவலை வளராதே—இதைக்
காதாற கேட்டவர் கண்டவர் யாவரும்
கதரையணிவோமே.

7 சிந்தை தெளிய மருந்திதுவே சொன்னோம்
சேர்ந்து முயல்வீரே—இதைப்
பந்தப்படுத்திப் பலனுற செய்து
பணிந்து பயில்வோமே.

8 சந்ததமெங்கள் சிறப்பை வளர்க்கிற
சிந்தனை பெரிதாமே—அந்த
மந்திரக் கர்த்தர்களத்தனையோருக்கும்
வந்தனை செய்வோமே.

உங்கள் வியாபாரம் விருத்தியடைய
ஆஸாதில்
விளம்பரம் செய்யுங்கள்.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.